பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 09 வெள்ளிக்கிழமை (23.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 207

# முறையற்ற கைது, காணாமற்போதல் குறித்து பொதுமக்கள் நீதிமன்றத்தில் முறையிடலாம்

## நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன்23

குடாநாட்டில் சட்ட முறையற்ற கைதுகள், காணாமற்போதல் தொடர்பாக பொதுமக்கள் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யமுடியும் என்று யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பான அவரது அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு காணாமற்போகும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருகின்றன.

ஏற்கனவே, செம்மணி புதைகுழி, கோப்பாய் புதைகுழி ஆகியன தொடர்பாக வழக்கு எதுவும் முன்னரே எடுக்கப்படவில்லை. சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள் - பொலீஸிலோ, நீதிமன்றத்திலோ முறைப்பாடு எதனையும் செய்யவில்லை.

காலம் தாழ்த்தி முறைப்பாடு செய்யப்பட்டதால் சம்பந்தப்பட்டவர்களை உயிருடன் மீட்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது. அத்துடன், சம்பவம் தொடர்பான நம்பகத்தன்மை இல்லாது போனதுடன் சாட்சியங்களும் இல்லாமல் போயின.

கடந்த டிசெம்பர் மாதத்தில் இருந்து 50 பேருக்கு மேற்பட்டவர்கள் குடாநாட்டில் காணாமற்போயினர். ஆனால், இது தொடர்பான

(14 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்பாளர்கள் சிக்கல் குறித்து ஆராய ஒஸ்லோவில் 29 இல் கூட்டம்

## ஐந்து 'நோர்ட்டிக்' நாடுகளும் கூடுகின்றன

கொழும்பு, ஜூன் 23

**சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்தோர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதற்கான தகைமையை இழந்துள்ளனர் என்ற தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் மீள உறுதிப்படுத்தியிருப்பதை அடுத்து கண்காணிப்புக் குழுவின் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காக ஐந்து நோர்ட்டிக் நாடுகளின் பிரதிநிதிகளும் அடுத்த வியாழக்கிழமை - 29 ஆம் திகதி - ஒஸ்லோவில் கூடுகின்றனர்.**

இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணை வகிக்கின்ற நோர்வே மற்றும் ஐஸ்லாந்து, டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய ஐந்து நோர்ட்டிக் நாடுகளின் பிரதிநிதிகளே யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஐந்து நாடுகளில் நோர்வே, ஐஸ்லாந்து தவிர்ந்த ஏனைய மூன்று நோர்ட்டிக் நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்றன.

இந்த மூன்று நாடுகள் உட்பட 25 நாடுகள் இடம்பெறும் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தி அதனைத் தடை செய்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஈச்சமோட்டையில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஜூன்23

ஈச்சமோட்டை கிறிஸ்துராஜா தேவாலயத்துக்கு அருகில் நேற்று மாலை 5.30 மணியளவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இனந்தெரியாதவர்கள் நடத்திய இத்தாக்குதலைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

தாக்குதல் நடத்தியவர்களில் ஒருவர் இதில் காயமடைந்தார் என்றும் -

படையினர் அப்பகுதியில் முன்னிரவிலும் தேடுதல் நடத்தினர் என்றும் - தெரிவிக்கப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இந்தியப் பிரதமர் - மங்கள சமரவீர பேச்சு

கொழும்பு, ஜூன் 23

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப்பேசினார்எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்தும், அதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் இந்தியப் பிரதமரிடம் அவர் விவரித்துள்ளார்.

ஒஸ்லோவில், இலங்கை அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் திடீரென மறுத்தனர் எனவும் - அவர்கள் புதிதாக நிபந்தனைகள் விதித்ததால் ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்தும் விளக்கிய அவர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் உள்ள ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் மறுப்பதனால், சமாதானப் பேச்சுகளில் மேலும் இடையூறுகள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனநாயக அடிப்படையில் இலங்கையில் அனைத்துத் தரப்பும் ஏற்றுக்கொள்ளும் வகையிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியுடன் இருக்கிறார் என மங்கள சமரவீர மன்மோகன் சிங்கிடம் தெரிவித்தார் எனத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பின்போது, இருதரப்பும் மோதல் போக்கைக் கைவிட்டு பரஸ்பர நம்பிக்கையுடன் நோர்வே தலைமையில் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க முன்வரவேண்டும் என இந்திய அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறைத் தகவல்கள் தெரிவித்தன.

இச்சந்திப்பில் இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் சியாம் சரண், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் என்.கே.நாராயணன் ஆகியோரும் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மின்சாரக் கட்டணம் விரைவில் உயர்வு

கொழும்பு, ஜூன் 23

மின்சாரத்துக்கு நிலையானதும், அதிகமானதுமான கட்டணமொன்றை அறவிடும் யோசனைக்கு அமைச்சரவையில் எதிர்ப்புகள் வெளியானதையடுத்து, மின் கட்டணங்களில் சிறு அளவிலான அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

எரிபொருட்களின் விலைகளின் அதிகரிப் பையடுத்து மின் கட்டணங்களில் நிலையான அதிகரித்த கட்டணமொன்றை மேற்கொள்ளும் யோசனையை மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் ஜோன் செனிவிரட்ன அமைச்சரவையில் முன்வைத்திருந்தார். இந்த யோசனை நேற்று முன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# குடிவரவுச் சட்டத்தின் கீழ் கைதானோருக்கு விமோசனம்

## உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பில்

கொழும்பு, ஜூன் 23

சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்றனர் என்ற சந்தேகத்தின் கீழ் குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள 202 பேரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

குடிவரவு - குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பிணை வழங்கப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து பல்வேறு தரப்புக்களில் இருந்து சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, இது விடயத்தில் கவனஞ்செலுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவைக் கேட்டிருந்தார்.

இதனையடுத்து, இந்த விடயம் குறித்து உயர் நீதிமன்றத்தில் ஆராயப்பட்டது. இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த யுவதியொருவர் நீர்கொழும்பு சிறைச்சாலையில் உயிரிழந்தமை குறித்தும் உயர் நீதிமன்றம் கவனஞ்செலுத்தியது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஜோஸப் பராராஜசிங்கத்தின் இடத்துக்கு சந்திரநேருவின் மகனுக்கு நியமனம்?

கொழும்பு, ஜூன் 23

மாமனிதர் ஜோஸப் பரராஜசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் ஏற்றப்பட்ட நாடாளுமன்ற வெற்றிடத்துக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேருவின் மகன் சந்திரகாந்தன் நியமனம் பெறக்கூடும் என்று தெரிகிறது.

இது தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடினர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சந்திரநேருவின் மகனை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்ய ஒப்புக்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

லண்டனில் உள்ள சந்திரகாந்தனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேரில் சந்தித்து அவரை இலங்கைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்துள்ளனர் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

உதயன்

மாற்றப்பட்ட தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| பழைய தொ.இல. | 222 2085 |
| | 222 2050 |
| புதிய தொ.இல. | 222 9955 |
| | 222 9944 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அவசர கால அம்புலன்ஸ் சேவைக்கு படையினர் அனுமதி இன்னுமில்லை

## இலங்கை செஞ்சிலுவை வட்டாரம் தெரிவிப்பு

நல்லூர்,ஜூன்23

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளை, மற்றும் இரவு வேளைகளில் அவசர நோயாளர்களை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான 'அவசரகால அம்புலன்ஸ் சேவைக்கு' பாதுகாப்பு பிரிவினரின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை என இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக பொதுமக்கள் அவசர நோயாளர்களை உடனடியாக வைத்தியசாலைகளில் சேர்த்து சிகிச்சை வழங்குவதில் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

வீதிகளில், அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களும், பரிசோதனைகள் மற்றும் சோதனைகளுக்குட்படவேண்டியுள்ளது. இதனால், நோயாளர்கள் உயிரிழக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால், அவசர நோயாளர்கள் சிரமமின்றி சிகிச்சை பெற, செஞ்சிலுவைச் சங்கத்தால் அவசர அம்புலன்ஸ் சேவை நடத்தப்படவுள்ளது.

இதற்கான அனுமதி படைத் தரப்பிடம் கேட்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை அவசர சேவை நடத்துவதற்கான அனுமதி படைத் தரப்பினால் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (204-111)

### சுன்னாகம் இளைஞரை காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்23

சுன்னாகத்திலிருந்து அரச மரவேலைப் பயிற்சிப் பட்டறைக்காக நேற்றுமுன்தினம் யாழ்.நகருக்கு வந்த இளைஞர் ஒருவர் வீடு திரும்பவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த அன்ரன் அல்பிரட் ஜோசப் சேவியர் (வயது 25) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் அவரது சகோதரர் முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

### வைத்திய பட்டப்படிப்புக்கு நேரடி அனுமதிபெற வாய்ப்பு

வி.எஸ்.எம்.யூ. பல்கலைக் கழகத்தில் வைத்தியத்துறை பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் ஆர்வமுள்ளோருக்கு நேரடி அனுமதி வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் வெளிநாட்டு மாணவர் அனுமதிக்கான பேராசிரியர் ஜூரி அலெக்ஸின்கோ இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இவரை 25ஆம் திகதி கொழும்பிலும், 29ஆம் திகதி கண்டியிலும், 30ஆம் திகதி மட்டக்களப்பிலும் சந்திக்கலாம். மேலதிக விவரங்களை பெறவிரும்புவோர் 077 - 3017883 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (க)

### குவைத் நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,ஜூன்23

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் ஆறுபேருக்கு குவைத் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது என்று வலி.வடக்கு பிரதேச செயலர் க.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மாணிக்கம் இரத்தினேஸ்வரி (அளவெட்டி தெற்கு), வி.இரட்ணசிங்கம் (வீமன்காமம் வடக்கு), எஸ்.ஆர்.ஜெயரட்ணம் (அளவெட்டி தெற்கு), சிவஞானம் ஜெயசூரியர் (தையிட்டிப்புலம்) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் 14 நாள்களுக்குள் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (204)

### ஏறாவூரில் கிளைமோர் மீட்பு

ஏறாவூர் பிரதான வீதியிலிருந்து அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்றைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

ஏறாவூர் பிரதான வீதியில் நேற்றுக் காலை செல்லவிருந்த இராணுவ வாகனத் தொடரணி ஒன்றை இலக்கு வைத்து இந்தக் கிளைமோர் பொருத்தப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. நேற்றுக் காலை பதினொரு மணியளவில் இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது. (க)

## துன்னாலையில் படுகாயமடைந்த சிப்பாய்களுள் இருவர் மரணம்!

கரவெட்டி,ஜூன்23

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்த இராணுவக் கோப்ரலும் மற்றொரு சிப்பாயும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த கோப்ரல் ரஞ்சித் (வயது 32), முனசிங்க (வயது 23) ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

ஆயுததாரிகளின் கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மூன்று படையினர், மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டிருந்தனர். அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில், படுகாயமடைந்த மூவரில் இருவர் உயிரிழந்தனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மரண விசாரணைகளை மேற்கொண்டு சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, இச்சம்பவத்தையடுத்து தாக்குதலுக்குள்ளான தனியார் பஸ்ஸின் உரிமையாளரான பூ.சசிக்குமார் என்பவர் நேற்று முன்தினம் படையினரால் கைதுசெய்யப்பட்டு, இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். மினிபஸ்ஸூம் இராணுவப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தது.

நேற்றையதினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மினிபஸ் உரிமையாளர் ஆஜர் படுத்தப்பட்டார். (க-204-70)

### யாழ்.வாசிகள் கண்டியில் கைது

யாழ்ப்பாணம்,ஜூன்23

புதிதாக கொள்வனவு செய்த வாகனத்திற்கான வாகனப் பதிவுப் புத்தகம் பெறுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி சென்ற பெண் உட்பட மூவரை கண்டி கரிஸ்பத்துவ பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தவசிகுளம் கொடிகாமத்தைச் சேர்ந்த சண்முகம் சஜீபன், கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் வித்தியகாந், கொக்குவில் சிவகுரு ஒழுங்கையைச் சேர்ந்த இரட்ணசிங்கம் வைஷ்னா ஆகிய மூவருமே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது. (190)

### கலைப்பீட பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்23

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன. இப் பெறுபேறுகளை பல்கலைக் கழக வளாகத்திலுள்ள விளம்பரப்பலகையில் பார்வையிடலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### மத்திய மருந்தகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்23

புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் திறந்துவைக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைப்பார்.

## பேச்சுக்குப் புலிகளை இழுத்து வருவதே உசிதம் அது ஜே.வி.பிக்குப் புரியாதமை முட்டாள்தனம்

### ஐ.தே.க. பிரதிப் பொதுச்செயலாளர் விமர்சனம்

கொழும்பு, ஜூன் 23

''தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதன்மூலமாகவோ அல்லது வடக்கு - கிழக்கைப் பிரிப்பதன் மூலமாகவோ இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைத் தீர்க்க முடியாது. அச்செயற்பாடு யுத்தத்திற்கே வழி வகுக்கும்.

''புலிகளைத் தடை செய்வதை விடவும் புலிகளைப் பேச்சு மேசைக்கு இழுப்பதே புத்திசாலித்தனம். இதை ஜே.வி.பியினர் உணர்ந்து செயற்படவேண்டும். அவர்களுக்கு அது புரியாதமை முட்டாள்தனம்''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

புலிகள் இயக்கம் தடைசெய்யப்படவேண்டும் என்றும் வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்றும் ஜே. வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றில் கூறியவை பற்றிக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுபற்றி அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:-

நாட்டில் தேசியப் பிரச்சினை நாளுக்கு நாள் உக்கிரமடைந்துகொண்டு போகின்றது. இப்பிரச்சினையை இல்லாதொழிப்பதென்றால் புலிகளை பேச்சுக்கு இழுக்க வேண்டும் என்பதை இந்நாட்டு மக்கள் உணர்ந்து வைத்துள்ளனர்.

ஆனால், ஜே. வி.பியினரோ யுத்தம் மூலமே பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என நினைக்கின்றனர். பிரச்சினைகள் உக்கிரமடையும் போதெல்லாம் புலிகளைப் பேச்சுக்கு இழுப்பதற்கான வழிவகைகளைச் செய்வதே உசிதமானது. ஆனால் எரிகின்ற நெருப்பில் எண்ணெய ஊற்றும் விதமாகச் செயற்படுகின்றனர் ஜே.விபியினர்.

இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்யப்படவேண்டும் என்றும் வடக்கு - கிழக்கு பிரிக்கப்படவேண்டும் என்றும் ஜே.வி.பியினர் கூறுகின்றனர்.

புலிகளைத் தடைசெய்வதன்மூலம் பிரச்சினை மேலும் உக்கிரமடையும். யுத்தத்தை நோக்கி நாடு தள்ளப்படும். புலிகள் பேச்சு மேசைக்கு வரமாட்டார்கள் என்பதை ஜே.வி.பியினர் நன்கு அறிந்திருந்தும் சிறுபிள்ளைத் தனமாகச் செயற்படுகின்றனர்.

இப்போதைய நிலைமைக்கு ஏற்ப புலிகளைத் தடைசெய்யும் நடவடிக்கையில் இறங்குவதை விட்டுவிட்டு அவர்களைப் பேச்சு மேசைக்கு இழுக்கும் முயற்சியில் ஜே.வி.பியினர் இறங்கவேண்டும்.

புலிகள் வன்முறைகளில் ஈடுபடுகிறார்கள் என்றும் - படையினரைக் கொலை செய்கிறார்கள் என்றும் கூறப்படுபவை உண்மைதான். அதற்காக அச்செயற்பாடுகளில் அவர்களை மேலும் ஈடுபடுத்தும் வண்ணம் நாம் செயற்படக்கூடாது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் எந்த முயற்சியாக இருந்தாலும் அது புலிகளை பேச்சு மேசைக்கு இழுக்கக்கூடிய முயற்சியாக இருக்கவேண்டும் என்பதை ஜே.வி.பியினர் உணர்ந்து செயற்பட வேண்டும்.- எனக் கூறினார். (க)

## வெலிங்டன் - ஆரியகுளம் இடையே வாகனப் போக்குவரத்துக்குத் தடை

யாழ்.ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கும் ஆரியகுளம் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வாகனப் போக்குவரத்து கடந்த சில நாள்களாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதியில் இரண்டு பக்கமும் வீதித் தடைகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்தைப் பொலீஸார் தடை செய்துள்ளனர்.

சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் பயணம் செய்பவர்களும், பாதசாரிகளுமே இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

அவர்களும் அப்பகுதியில் கடமையில் இருக்கும் பொலீஸாரினால் சோதனையிடப்பட்ட பின்பே போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இப்பகுதியூடான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டதையடுத்து இந்த வீதியூடாகச் சேவையிலீடுபட்டுவந்த இ.போ.ச. பஸ்கள், மினிபஸ்கள் ஆகியன மாற்று வழியாகவே சேவையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் தங்கியுள்ளார் என்றும் - அவரது பாதுகாப்புக்காகவே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## கண்காணிப்பாளர்களை மாற்ற புலிகள் கோருவது அநீதியானது

### அமைச்சரவை பேச்சாளர் கருத்து

கொழும்பு, ஜூன் 23

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து மூன்று நாடுகளின் உறுப்பினர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று விடுதலைப் புலிகள் விடுக்கும் கோரிக்கை அநீதியானது

- இவ்வாறு ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான அனுர பிரிய தர்ஷன யாப்பா நேற்றுத் தெரிவித்தார்.

அரச தகவல்கள் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் வெளியிட்ட அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் கண்காணிப்பாளர்கள் பக்கச்சார்பாகச் செயற்பட மாட்டார்களென்று, அரசு நம்புவதாகக் கூறினார். அவர் மேலும் கூறுகையில் -

'நோர்வே அனுசரணைப் பணியைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதை அரசு விரும்புகிறது. அதேபோல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உறுப்பினர்கள் கண்காணிப்புக் குழுவில் இருப்பதையும் அரசு விரும்புகிறது. அவர்கள் நேர்மையான முறையில் தமது பணியை முன்னெடுப்பார்களென்று அரசு நம்புகிறது. புலிகள் தங்களுக்கு [illegible] விடயங்கள் பற்றி [illegible] லைக்குரியது .- என்று கூறினார் அமைச்சர்.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6242
Fax: 021 222 5600
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying

யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## தந்திரோபாய நகர்வுகளுக்கான மிக முக்கிய காலம் நெருங்குகிறது

அமைதி முயற்சிகள் தோற்று - செயலிழந்து - போய், நாட்டில் மீண்டும் ஒரு பயங்கர யுத்தம் வெடிக்கும் ஆபத்து ஏது நிலை உருவாகி வருவதை இந்த நாட்டின் சாதாரண பிரஜை வரை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

விரும்பியோ, விரும்பாமலோ இந்த இலங்கைத் தீவு ஒரு கொடூர யுத்தத்துக்கு முகம் கொடுக்கும் அவலம் தவிர்க்க முடியாததாகி வருகிறது.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அடுத்தது என்ன என்ற கேள்வி எழுகிறது. இலங்கைத் தீவில் அகோர யுத்தம் நிலவும்போது - முன்னரைப் போல சர்வதேச சமூகம் வெறும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டு - அதனைக் கைகட்டிப் பார்த்திருக்குமா என்ற வினாவும் எழுகின்றது.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து அவர்களைத் தடை செய்தது ஐரோப்பிய ஒன்றியம். அதனால், அந்த ஒன்றியத்தில் இடம்பெற்றிருக்கும் சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அந்தப் பணியைச் செய்வதற்கான நடுநிலைத் தன்மையை - தார்மீகத் தகைமையை - இழந்து விட்டனர் என்ற யதார்த்தத்தைச் சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள், அக்காரணத்தினால் அவர்களை அந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு வற்புறுத்தியிருக்கின்றனர். அதற்கு ஒரு மாத கால அவகாசமும் அவர்கள் வழங்கியிருக்கின்றனர்.

இந்த ஒரு மாத காலத்துக்குள் அந்த இடங்களுக்கு புதிய - பொருத்தமான - அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட - கண்காணிப்பாளர்களை அனுசரணைத் தரப்பான நோர்வே தேடிப் பிடித்துக் கொண்டுவந்து பணிக்கு அமர்த்துமா என்பது சந்தேகமே.

அந்நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை சுமார் 65 வீதத்தினால் குறையும் ஆபத்து உள்ளது. அதனால், ஏற்படும் நெருக்கடி, தென்னிலங்கையில் தீவிர யுத்த வெறியில் இருக்கும் பாதுகாப்பு வட்டாரங்களுக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையைத் தவறாது ஏற்படுத்திக் கொடுக்கும். யுத்த நெருக்கடிக்குள் மோசமாகச் சிக்கக் கூடிய தமிழர் தாயகத்தில் சர்வதேச சமூகத்தின் பார்வையாளர்களாக - பிரசன்னப் பிரதிநிதிகளாக - இருக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையிலும், பணியிலும், பொறுப்பிலும் பெரு வீழ்ச்சி ஏற்படுவது தமிழர்களைப் படுகொலை செய்து, பேரழிவுக்கு உள்ளாக்கி, அதில் லாபம் தேட முயலும் பேரினவாத சக்திகளுக்கு உகந்த - பொருத்தமான - போர்க் களநிலைமையைத் தவறாது உருவாக்கிக் கொடுக்கும்.

அவ்வாறு தமிழர்களுக்கு - ஏன் முழு இலங்கைக்குமே - பேரழிவு தரக்கூடிய யுத்தம் மீள வெடிக்கும்போது அந்நிய சக்திகள் இரண்டு வடிவங்களில் இங்கு தமது மூக்கை நுழைக்கும் ஏது நிலையும் உண்டு. அதற்கான புறநிலை இப்போதே கருக்கட்டி வருவதும் நாம் கவனிக்கத் தக்கது.

அப்படி இலங்கைத் தீவுக்குள் அளவு மீறி தலையை நீட்டக் கூடிய இரண்டு சக்திகளுள் ஒன்று - இந்தியா. மற்றது - 'உலக அமைதிக் காவலனின்' ஏவலாக வரக் கூடிய ஐக்கிய நாடுகள் சபை.

உலகில் பிணக்குகள், பூசல்கள், உள்ளூர்க் கலகங்கள் நிகழும் நாடுகளில் மனிதாபிமானத்தின் பெயரைக் கூறிக் கொண்டு ஐ.நா. நுழையும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றன. உலகப் பொலீஸ்காரனான அமெரிக்காவின் தலையீடு பல இடங்களிலும் ஐ.நா. படை ரூபத்தில்தான் அரங்கேறி வருகின்றது. இலங்கையில் இனப்போர் மோசமாக வெடிக்கும்போதும் அந்தத் தலையீட்டுக்கு அதிகளவில் வாய்ப்புண்டு.

ஆனால், இந்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஐ.நா.வின் பெயரைப் பயன்படுத்தியோ அல்லது வேறு வடிவத்திலோ அந்நிய சக்திகள் புதிதாக வந்து காலூன்றுவதை இந்தப் பிராந்தியத்தின் ஏக வல்லாதிக்க சக்தியான இந்தியா அடியோடு விரும்பாது; அதற்கு அனுமதிக்கவும் மாட்டாது.

எனவே, அது முந்திக் கொண்டு இப்பிராந்தியத்துக்குள் மூக்கை நுழைக்க முயலுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். அதற்கான புற ஏதுநிலைகள் இப்போதே உருவாகி வருவதும் நாம் கவனிக்கத்தக்கது.

உத்தேசப் போர் தவிர்க்க முடியாததாகி வருவதை உணர்ந்துள்ள தமிழர்களின் தலைமை, அத்தகைய போர் வெடித்த பின் உருவாகக் கூடிய இத்தகைய பிற தலையீடுகளை ராஜதந்திர ரீதியில் எதிர்கொள்வதற்கான திட்டங்கள், வியூகங்கள், தந்திரோபாயங்கள் போன்றவற்றை வகுத்து வைத்துக் கொள்வதும் அவசியமாகின்றது.

இத்தகைய தலையீட்டு ஆர்வமுள்ள சக்திகளின் இலக்கை, தமிழர்களின் உரிமைப் போராட்ட இலக்குக்குச் சமாந்தரமானதாக மாற்றும் வகையில் தந்திரோபாயங்களை வகுத்துக்கொண்டு, உரிமைப் போருக்கான ஊக்க சக்தியாக அவற்றைப் பயன்படுத்தும் நகர்வைத் தமிழர்கள் தங்கள் திட்டமாக முன்னெடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய மட்டத்திலும், இலங்கைத் தேச மட்டத்திலும், சர்வதேச ரீதியிலும் மிக நுட்பமாக இராஜதந்திரக் காய்நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டிய காலம் தமிழர்களின் தலைமைக்கு நெருங்கி வருகின்றது. அதைக் கவனமாக - தீர்க்கதரிசனப் பார்வையோடு - கையாள்வது அவசியம்.

# சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை இருதரப்பினரும் மதித்து நடக்கவேண்டும்

### வற்புறுத்துகிறது ஐ.சி.ஆர்.சி.

இலங்கையில் நிலைமைகள் மோசமாகிக் கொண்டுபோவது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. ஆயுத மோதலில் ஈடுபட்டுள்ள தரப்புகளைச் சர்வ தேச மனித உரிமை சட்டங்களின் கொள்கைகளையும் விதிகளையும் மதித்து செயற்படும்படி அது கேட்டுக்கொள்கின்றது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் வெடிகுண்டுகளினால் பொதுமக்கள் கொல்லப்படுவது சமீபகாலத்தில் அதிகரித்து வந்துள்ளது. கெப்பிட்டிக்கொல்லாவையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 50இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இதற்கு முந்திய வாரத்தில் 16 கண்ணிவெடிச் சம்பவங்களிலும் ஏனைய வன்செயல்களிலும் 60 சிவிலியன்களுக்கு மேல் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்துள்ள அந்த அமைப்பு சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் முக்கியமாகப் பின்வரும் அம்சங்களைக் குறிப்பாக மதித்து செயற்படும்படி இருதரப்பினரையும் கேட்டுக் கொண்டுள்ளது.

- எந்தச் சமயத்திலும் பொதுமக்களையும் போரிடுபவர்களையும் வேறுபடுத்திக் கொள்ளுதல்.
- போரிடுபவர்கள் இராணுவ பொருள் களை மட்டுமே தாக்குதலின்போது குறிவைப்பது.
- பொதுமக்கள் உயிரிழப்பை எப்பொழுதுமே தவிர்த்தல் அல்லது குறைக்க கூடிய வரையிலான முன்னெச்சரிக்கைகளை எடுத்தல்
- ஆயுதப் பிணக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தனது செயற்பாடுகளை மும்முரமாக்கியுள்ளதாகவும் நிலைமைகளை ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதிகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் பொதுமக்களைப் பாதுகாப்பதிலும் சுகாதார வசதிகளைக் கவனிப்பதிலும் மற்றும் அவசிய தேவைகளைக் கவனித்து வருவதிலும் ஈடுபட்டு வருவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## குடும்பத் தலைவரை இழந்த 10 குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் வழங்குவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி, ஜூன்23

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பத் தலைவரை இழந்த பத்து குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பிI மாவட்டத்தினர் இந்தத் தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் முதலம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ள கழக நிகழ்வில் இவை வழங்கப்படும்.

அத்துடன், கடந்த வருட ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் அதிகூடிய சித்தி பெற்ற மாணவர்கள் ஆகியோருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் நிதி வழங்கலும் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளும் பிரதிநிதி மாவட்ட ஆளுநர் ஆர்.இராகவன் இவற்றினை வழங்குவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(117)

### அனுபவம், அறிவில்

# இலங்கை கடற்படைக்கு இணையே கிடையாதாம்

### கிழக்குத் தளபதி பெருமிதம்

கொழும்பு, ஜூன்23

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர் புரிவதில் இலங்கைக் கடற்படையினர் பெற்றுள்ள அனுபவம், அறிவு முதலியவற்றுக்கு இணையாக உலகில் வேறு எந்தக் கடற்படையுமே கிடையாது என்று கூறியிருக்கிறார் இலங்கைக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதி ரியார் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க.

எதிர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எங்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. கடற்படையின் கட்டுப்பாடு உறுதியாக இருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார்.

கிழக்குக் கடற்படை தலைமையகத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது ரியார் அட்மிரல், விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதல்களே எமக்குள்ள சிரமமான பிரச்சினை. ஆனால், தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் கடல் கட்டுப்பாட்டை முனைப்புடன் பேணி வருகின்றோம் -என்று மேலும் குறிப்பிட்டுள்ளார். பேன்குருய்சர் கப்பல் தகர்ப்பு முயற்சியை முறியடித்த கடற்படையினரை அவர் வெகுவாகப் பாராட்டினார்.

## அபிவிருத்திக்கான அரங்கு கருத்தரங்க அமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன்23

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் 'அபிவிருத்திக்கான அரங்கு' பற்றிய கருத்தரங்க அமர்வு இன்று காலை 9.30 மணிமுதல் 1.30 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

'அபிவிருத்தி அரங்கு' பற்றிய அறிமுக உரையினையும் 'விழிப்புணர்வுச் செயற்றிட்டத்திற்கான அரங்கு' என்ற தலைப்பிலான கருத்துரையையும் செயல் திறன் அரங்க இயக்க நிறைவேற்று இயக்குநர் தே.தேவானந்த் ஆற்றுவார். 'ஆரம்ப பாடசாலைக் கல்வி அபிவிருத்திக்கான அரங்கச் செயற்றிட்டம்' என்ற தலைப்பில் ஈழத்து நாடக உலகின் தந்தையான குழந்தை ம.சண்முகலிங்கம் கருத்துரை வழங்குவார்.

'ஆற்றல் மேம்பாட்டுக்கான அரங்கு' பற்றி கொழும்பிலுள்ள 'விழுது' ஆற்றல் மேம்பாட்டு மைய அதிகாரி ச.பாஸ்கரன் உரையாற்றுவார். 'உளசமூக பணித்திட்டத்தில் அரங்கு' என்ற தலைப்பில் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் உரைநிகழ்த்துவார்.

அபிவிருத்திக்கான அரங்க செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகப் பாடசாலைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்ட குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகமும் மேடையேற்றப்படும்.

'அரங்கைப் பயன்படுத்துகின்ற செயற்றிட்டங்கள் ஊடான அபிவிருத்திச் செயற்பாடுகள் நிலைத்து நிற்பவையாக அமைவதை எமது பட்டறிவின் ஊடாக நாம் கண்டுள்ளோம். அதனை ஏனையவர்களுடனும் பகிர்ந்துகொள்வதற்காகவே இந்தக் கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது'' - என்று செயல் திறன் அரங்க இயக்க நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் பு.றஜனி தெரிவித்தார்.

(ம)

## உதவிப்பணம் பெறுவோரின் கவனத்திற்கு!

தென்மராட்சி, ஜூன்23

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவில் ஜூன் மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் வவுச்சர்கள் பிரதேச அஞ்சலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

உதவிப்பணம் பெறுவோர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்குப் பின் கைதடி, கொடிகாமம், சாவகச்சேரி அஞ்சல் அலுவலகங்களிலும், அதன் கட்டுப்பாட்டு உபஅஞ்சல் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. புற்றுநோய் மற்றும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(204-122)

## பல்கலை. அனுமதியைப் பெறாதவரும் மேற்கல்வியைத் தொடர வாய்ப்பு

பல்கலைக்கழகங்களில் பயில்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களும் தமது உயர்கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட இருக்கிறது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆதரவில் இத்திட்டத்தை முன்னெடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ்வாறான மாணவர்கள் தமது கல்வியைப் பட்டம் பெறும் அளவுக்கு முன்னேற்றிக் கொள்வதற்கு வசதியாக பல்கலைக்கழகங்கள் தமது கல்வித் திட்டங்களை மேம்படுத்திக் கொள்ள விருக்கின்றன.

பேராதனை, மொறட்டுவ, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களுடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிர்வாகம், நூலக சங்கம், திறந்த பல்கலைக்கழகம் மற்றும் அளவையியல் நிர்வாகம் ஆகிய கல்வி நிறுவனங்களும் இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

### நாளை

ஆனி - 10
சனிக்கிழமை
24.06.2006
திதி : சதுர்த்தசி
முன்னிரவு : 10.28
நட்சத்திரம் : ரோகிணி
பிற்பகல் : 03.58
சுபநேரம் : 02.55 - 04.25
ராகுகாலம் : 08.55 - 10.25

### உதயவாக்கு

வரலாறு என்பது நிகழ்ச்சிகளின் தொகுப்பன்று. அந்நிகழ்ச்சிகள் எவ்வாறு மக்களைப் பாதித்துள்ளன என்பதை விளக்குவதே உண்மையான வரலாறு.
- ஜவஹர்லால் நேரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## COLLEGE OF INFORMATION TECHNOLOGY *(CIT)*

Sivan Lane, Avarangal, Puttur, Jaffna
e-mail-avarangalcit@yahoo.com T.P.0777589703

A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்காக விசேட சலுகைக் கட்டணத்துடன் வரையறுக்கப்படாத பயிற்சி வகுப்புக்கள் 24.06.2006 (சனிக்கிழமை), 27.06.2006 (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகவுள்ளன.

***DIPLOMA COURSES***

- Diploma in Microsoft Office
- Diploma in Computer Studies
- Diploma in Desktop Publishing
- Fundamenal of Information Technology
- Internet Technolgy (HTML, ASP)

விசேட சலுகைக் கட்டணம்

***CERTIFICATE COURSES***

- Word processing
- Data Base Management
- Photoshop
- Page Maker
- Web Designing
- Computer Hardware Technology
- Access with SQL

எமது நிறுவனத்தில் கற்கை நெறிகள் அனைத்தும் கணனித்துறையில் **B.Sc., MSc** பட்டதாரிகளால் மேற்கொள்ளப்படும்

**பொதுத் தகவல் தொழில் நுட்பம் (GIT)**
A/L பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட்ட
**கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**A/L 2008 மாணவர்களுக்கானது 26.06.2006**
**A/L 2007 துரித மீட்டல் வகுப்பு 27.06.2006**

(51470)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 08 - 1926



மறைவு 03 - 07 - 2005

அமரர் **கணபதி மருதலிங்கம்** (மணியம்)

திதி: திரயோதசி

ஆண்டு ஒன்று நீங்கினாலும்
உம் நீண்ட துயில் நீங்கிடுமா?
எம் வேதனைதான் தீர்ந்திடுமா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு. - **குடும்பத்தினர்.**

(51179)

## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 06 - 02 - 1927



உதிர்வு 05 - 07 - 2005

**அமரர் சின்னத்தம்பி மயில்வாகனம்**

*(மயில்வாகனம் நகைக்கடை உரிமையாளர் -பருத்தித்துறை)*

திதி: சதுர்த்தசி (24.06.2006)

*எம் குடும்பத்தின் ஒளி விளக்கே அன்போடு*
*எம் அருகிருந்து பண்பாக எமை வளர்த்தீர்கள்*
*ஊர் போற்ற நாம் வாழ உவகை கொண்டீர்கள்*
*வழிகாட்டல் போதுமென்றோ வானுலகம் சென்றீர்கள்*
*எம்மை தோளிலும் மார்பிலும் தூக்கி*
*பாசத்தைக் காட்டி அன்புடன் அரவணைத்த அப்பாவே!*
*நாம் சீரோடும் சிறப்போடும் வாழ்வதைக் கண்டு*
*களிக்க காலனவன் மறுத்துவிட்டான் கடமை எல்லாம்*
*முடித்ததென்றோ காலன் உம்மை கவர்ந்தெடுத்து எமை*
*கண்ணீரில் மூழ்க விட்டான் தெய்வமே நாம் என்றும்*
*உங்களை நினைத்திருக்க நீங்கள் மட்டும் எம்மை*
*விட்டுப் பிரிந்ததேனோ ஓராண்டென்ன ஓராயிரம்*
*ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவெல்லாம்*
*எம்நெஞ்சைவிட்டு நீங்காது*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

(51285)(21.19.17)

'வித்தியாவாசா'
பூதராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை T.P. 3572

*உம் பிரிவினால் துயருறும்:*
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்**

## விளையாட்டு விழா

சுழிபுரம், ஜூன்23

பொன்னாலை பாபுஜி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுவிழா எதிர் வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலி மேற்கு பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் ஆ.சபாநாதனும், கௌரவ விருந்தினர்களாக பொன்னாலை ஜே/170 கிராம உத்தியோகத்தர் ஸ்ரீறஞ்சன், வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை ஆசிரியர் திருமதி சி.கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்துகெள்வர். சிறப்பு விருந்தினர்களாக சங்கானைப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் செல்வி. நா.நிரஞ்சனா, வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி இ.ஜீவா, வலி. மேற்கு குடும்பம்1கட்டமைப்புத் தலைவர் வ. கோமளநாதன், பொன்னாலை மாதர்சங்கத்தலைவி திருமதி ந.கமலாதேவி ஆகியோர் கலந்துகொள்வர்.

(204-28)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்23

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம் புளியடி சித்தியம்பதி அண்ணமார் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அதிகாலை 5 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன இடம்பெற்று வளுந்துப் பானைப் பூசை, பொங்கல் நிகழ்வு என்பன இடம் பெறும்.

பொங்கல் விழாவை முன்னிட்டு இன்று வெள்ளிக் கிழமை இரவு திருக் கதவு திறத்தல் பூசை இடம்பெறும்.

(204)

* *

யாழ்ப்பாணம், ஜூன்23

கோப்பாய் தனிப்பனை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி கோயில் பெருந் திருவிழா இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர் வரும் முதலாம் திகதி தேர்த்திரு விழாவும் மறுதினம் தீர்த்தச் திருவிழாவும் இடம் பெறும். (204)

* *

வண். வட மேற்கு ஆனைக் கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய சாந்திக மகோற்சவம் ஜூலை 10 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

15 தினங்கள் தொடர்ந்து நடைபெற வுள்ள இந்த நிகழ்வில் விசேட அபி ஷேகம், பூசை என்பன நடைபெறும். (204)

* *

யாழ்ப்பாணம், ஜூன்23

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம் பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்மன் ஆலய பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற வுள்ளது.

(204)



உ

**கோண்டாவில் கிழக்கு,**
**ஆசி மட அரசடி விநாயகர் ஆலயம்**
**விய வருஷ மஹோற்சவம்**
**23.06.2006 - 04.07.2006**

| | |
|---|---|
| 23.06.2006 | வெள்ளி பகல் 10 மணி கொடியேற்றம். |
| 28.06.2006 | புதன் காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், மாலை 5மணி பூச்சப்பறம் |
| 29.06.2006 | வியாழன் காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், மாலை 5மணி கைலாச வாகனம் |
| 30.06.2006 | வெள்ளி காலை அஷ்டோத்திர சங்காபிஷேகம், பகல் 12 மணி வேட்டைத்திருவிழா, மாலை 5மணி சப்பறம். |
| 01.07.2006 | சனி காலை 9 மணி இரதோற்சவம். |
| 02.07.2006 | ஞாயிறு காலை 10 மணி தீர்த்தோற்சவம் (ஆனி உத்தரம்), மாலை 5மணி கொடியிறக்கம். |
| 03.07.2006 | திங்கள் மாலை 5 மணி திருக்கல்யாணம் (முருகப்பெருமான்) |
| 04.07.2006 | செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி வைரவர் உற்சவம். |

**விசேட குறிப்பு**

| கொடியேற்றம் | இரதோற்சவம் | தீர்த்தோற்சவம் |
|---|---|---|
| *வசந்த மண்டபப் பூஜை பகல்9 மணி* | *வசந்த மண்டபப் பூஜை காலை 7.30மணி* | *வசந்த மண்டபப் பூஜை காலை 8.30மணி* |
| *கொடியேற்றம் பகல் 10மணி* | *சுவாமி தேர் பவனி காலை 9 மணி* | *சுவாமி தீர்த்தமாடுதல் காலை 10மணி* |

*தினமும் உதய பூஜை காலை 6.30மணி, அபிஷேகம் -காலை 8.30மணி, வசந்த மண்டபப் பூஜை-முற்பகல் 10.30மணி,*
*சாயரட்சை பூஜை- மாலை 4 மணி, வசந்த மண்டப்ப பூஜை-மாலை 5மணி*

கொடியிறக்கக் கிரியைகள் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.
உற்சவ நாள்களில் இரவுத்திருவிழா தினமும் மாலை 7மணிக்கு நிறைவுபெறும்.
மஹோற்சவ குரு:நா.ஹரீந்திரக் குருக்கள்
தினமும் காலை பஞ்சமுக விநாயகருக்கு பஞ்சமுக அர்ச்சனை நடைபெறும்.
தினமும் மதியம் அன்னதானம் நடைபெறும்.

**ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

கோண்டாவில் கிழக்கு. (51487)(21.19.17)



உ
*சிவமயம்*

**கோண்டாவில் வடக்கு**
அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத
ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானம்

## *வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்*

*சிவநேயச் செல்வர்களே!*

| | | | | |
|---|---|---|---|---|
| 23-06-2006 | வெள்ளி | - | கொடியேற்றம் | நண்பகல் 12 மணி |
| 27-06-2006 | செவ்வாய் | - | மஞ்சம் | மாலை 6 மணி |
| 30-06-2006 | வெள்ளி | - | சப்பறம் | மாலை 6 மணி |
| 01-07-2006 | சனி | - | தேர் | காலை 10.30 மணி |
| 02-07-2006 | ஞாயிறு | - | தீர்த்தம் | காலை 10 மணி, கொடியிறக்கம் மாலை 6 மணி பூங்காவனம் மாலை 4 மணி, வைரவர் பொங்கல் மாலை 4 மணி |

**மஹோற்சவ சிவாச்சாரியார்: 'குருமணி' 'கிரியாஜோதி' 'கிரியாரத்னா'**

**பிரம்மஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக்குருக்கள்**

**உற்சவம் பிரதி தினமும் காலை 8.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும்.**

*முக்கிய குறிப்பு:* அடியார்கள் தினமும் தங்களால் இயன்றளவு பால், தயிர், இளநீர், பூ, பன்னீர் கற்பூரம், அர்ச்சனை, அபிஷேகப் பொருள்கள் நல்கி சிவபூதவராயப் பெருமானின் திருவருவளைப் பெற்று இன்புற்று வாழ்வீர்களாக.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

**தேவஸ்தான பரிபாலன சபையாரும், ஊர்மக்களும்.**

விளம்பர அனுசரணை: **நாதன் ஸ்ரோர்ஸ்,** கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு. (51491)
(24.19.17)

## மரண அறிவித்தல்

## ஐயாத்துரை நிர்மலகுமாரன்



மட்டக்களப்பு (கொம்மாந்துறை) டிசோ மதுபானசாலை உரிமையாளரும் வாழைச்சேனையில் வசித்தவரும் யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நிர்மலகுமாரன் 20.06.2006 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் ஐயாத்துரை - மங்கையர்க்கரசி தம்பதியரின் மூத்த புதல்வனும் சரவணமுத்து - பூபதி தம்பதியரின் மருமகனும் தயாளினியின் அன்புக் கணவரும் அனுசியா (கனடா), லசித்தா, முகுந்தன் (கனடா), டிசோகாந் (யாழ்.பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலகுமாரி (கனடா), விஜயகுமாரி, நிர்மலகாந்தன் (மட்டக்களப்பு), விஜயகாந்தன் (டென்மார்க்), உதயகுமார் (டென் மார்க்), காலஞ்சென்ற ஜெயக்குமாரி, ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயலோஜினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவஞானம் (கனடா), பாலசிங்கம் (மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி), பத்மநாதன் (ஜேர்மனி), ஜீவா (கனடா), புவனேந்திரன் (கனடா), சாரதாதேவி, சத்தியலட்சுமி (டென்மார்க்), கைடி (டென்மார்க்), ஜெயகுமாரி (ஜேர்மனி), ஜெயாழினி (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் யோகேந்திரன் (டென்மார்க்), ஜீவசறோ (கனடா), தனலட்சுமி (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2006) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, திருநெல்வேலி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**G.P.S. வீதி, கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்.** (51463)(21.19.45)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி

## காயத்தால் கலைந்தது ஓவன் கனவு! இங்கிலாந்துக்கு பெரும் பின்னடைவு




கொலோன், ஜூன் 23

காயம் காரணமாக இங்கிலாந்து வீரர் மைக்கல் ஓவனின் உல கக் கிண் ணப் பய ணம் முடிவுக்கு வருகிறது. இவர் உடன டியாக இங்கி லாந்து திரும்புகிறார்.

ஜேர்மனியில் 18ஆவது உலகக் கிண்ணக் கால்பந்து தொடர் நடக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை கொலோனில் நடந்த ஆட்டத் தில் இங்கிலாந்து, சுவீடன் அணிகள் மோதின. இவ் ஆட்டம் தொடங்கிய முதல் நிமிடத்திலேயே இங்கிலாந்துக்குப் பலத்த 'அடி' விழுந்தது. அணியின் நட்சத்திர வீரரான மைக்கல் ஓவன் மூட்டு வலியால் கீழே சுருண்டு விழுந்தார். நேற்றுமுன்தினம் இவரது வலது மூட்டு பகுதியில் 'ஸ்கானிங்' செய்து பார்க்கப்பட்டது. இதில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இதையடுத்து ஓவன் குறைந்தது 5 மாதங்களுக்கு ஆட்டங்களில் பங்கேற்க இயலாது. இது இரண்டாம் சுற்றில் ஈக்குவடோரை சந்திக்கும் இங்கிலாந்துக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இம்முறை இங்கிலாந்து அணியில் இடம்பெற்ற முன்கள வீரர்களில் வெய்ன் ரூனி காயத்துடன் வந்தார். இப்போது மைக்கல் ஓவனும் காயம் அடைந்துள்ளதால் முன் களம் விறுவிறுப்பு இல்லாமல் உள்ளது. இங்கிலாந்து அணி. தற்போது மத்திய கள வீரரான அணித் தலைவர் பெக்காமையே அணி பெரிதும் சார்ந்துள்ளது. இது பற்றி பயிற்சியாளர் எரிக்ஸன் கூறுகையில், ''ஓவன் இல்லாத நிலையில் தியோ வால்கட், ஜோ கூல், ஸ்டீவன் ஜெரார்ட் போன்றோர் இருக்கின்றனர். எனவே, அணிக்கு பெரிதாக கவலை இல்லை. இங்கிலாந்தின் வெற்றிநடை ஜேர்மனியில் தொடரும்,'' என்றார்.

26 வயதான ஓவன் இங்கிலாந்துக்காக 80 சர்வதேச ஆட்டங்களில் விளையாடியுள்ளார். இங்கிலாந்து சார்பில் அதிக கோல் [36] அடித் தவர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். ''காயம் அடைந்து வெளியேறுவது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. இங்கிலாந்து சென்று உரிய சிகிச்சை மேற்கொள்ள உள்ளேன்,'' என்று கூறுகிறார் மைக்கல் ஓவன். காயமடைந்த ஓவனுக்காக உலகக் கிண்ணத்தை வென்று காட்டுவோம் என பெக்காம் சபதம் செய்துள்ளார். ''மிகப் பெரும் தொடரில் மைக்கல் ஓவன் இல்லாதமை வருத்தம் அளிக்கின்றது. முதல் பாதி முடிந்த போது, இவருக்காக உலகக் கிண்ணத்தை வெல்வது என வீரர்கள் அனைவரும் சபதம் செய்தோம்'' என்று கூறினார் பெக்காம்.

FIFA WORLD CUP GERMANY 2006 தொகுப்பு அதிரன்

## சேர்பியாவை வீழ்த்தியது ஐவரிகோஸ்ட்

சேர்பியாவுக்கு எதிரான மூன்றாவது லீக் ஆட்டத்தில் ஐவரிகோஸ்ட் 3-2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. நேற்றுமுன்தினம் ஐவரிகோஸ்ட், சேர்பியா அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் ஆட்டங்களிலும் இரு அணிகளும் தோல்வி அடைந்ததால், தொடரின் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்திருந்தன.

ஆட்டம் தொடங்கிய 10ஆவது நிமிடத்தில் சேர்பியா தனது முதல் கோலை அடித்தது. டீஜன் ஸ்டான்கோவிக் கொடுத்த பந்துப் பரிமாற்றத்தைப் பெற்றுக் கொண்ட நிகோலோ சிஜிக் எளிதாக கோல் அடித்து அசத்தினார். அடுத்த 10ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்து ஐவரிகோஸ்ட்டுக்கு அதிர்ச்சி அளித்தது சேர்பியா. இம்முறை கோல் அடித்தவர் சசா இலிக். இதற்குப் பதிலடி கொடுக்க ஐவரிகோஸ்ட் சற்றுத் திணறியது. ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் அருணா டின்டேனின் அற்புத ஆட்டம் ஐவரிகோஸ்ட்டுக்கு திருப்பம் அளித் தது. டின்டேன் ஒரு கோலைப் போட்டார். முதல் பாதியில் சேர்பியா 2-1 என்ற முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் ஐவரிகோஸ்ட் வீரர் அருணா டின்டேனின் அற்புதமான ஆட்டத் தால் 67ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட், சேர்பியாவை சமன் செய்தது. ஐவரிகோஸ்ட்டின் அபார ஆட்டம் தொடர்ந்தது. 86ஆவது நிமிடத்தில் ஐவரிகோஸ்ட் வீரர் பொனாவென்டர் கலோ மற்றொரு கோல் அடிக்க அரங்கமே அதிர்ந்தது. பதிலடி கொடுக்க நினைத்த சேர்பியாவின் முயற்சி பலன் அளிக்கவில்லை. இறுதியில் ஐவரிகோஸ்ட் 3-2 என்ற கோல் கணக்கில் மகத்தான வெற்றி பெற்றது.

## ஆர்ஜென்ரீனா திணறியது!

ஜேர்மனி, ஜூன் 23

நெதர்லாந்து, ஆர்ஜென்ரீனா அணிகள் மோதிய மூன்றாவது லீக் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. பலம் வாய்ந்த நெதர்லாந்து அணியின் ஆக்ரோசமான ஆட்டத்துக்கு முன் ஆர்ஜென்ரீனாவால் தாக்கப்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆர்ஜென்ரீனா, நெதர்லாந்து அணிகள் மோதிய மூன்றாவது லீக் ஆட்டம் நேற்றுமுன்தினம் பிராங்க்போர்டில் நடந்தது.

ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் நெதர்லாந்துக்கும், 5ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவுக்கும் மூலை உதை வாய்ப்பு அமைந்தன. இரண்டு வாய்ப்புக்களும் கோல் அடிக்காத நிலையில் வீணாகின. ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவுக்கு தடையற்ற உதை வாய்ப்புக் கிடைத்தது. ரிக்யூல்மா அடித்த அந்த உதை நெதர்லாந்துக் கோல் காப்பாளர் வான்டர்சர் கையில் பட்டு வெளியேறியது. சேர்பியாவுக்கு எதிரான இரண்டாவது லீக் ஆட்டத்தில் கோல் மழை [6] பொழிந்த ஆர்ஜென்ரீனா அணிக்கு, நெதர்லாந்து கடும் நெருக்கடி கொடுத்தது. இதன் காரணமாக இரு அணிகளும் முதல் பாதியில் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியின் முதல் நிமிடத்தில் நெதர்லாந்துக்கு தடையற்ற உதை வாய்ப்புக் கிடைத்தது. ராபின் வேன் பெர்சி கோல் கம்பத்தை நோக்கி அடித்தார். ஆனால், அது இலக்கை விட்டு வெளியே சென்றது. இதே போல் 52ஆவது நிமிடத்தில் தடைகளை மீறி ஆர்ஜென்ரீனா வீரர் ரிக்யூல்மா அடித்த உதையும் கோல் கம்பத்துக்கு வெளியே சென்றது. ஆர்ஜென்ரீனா வீரர் கார்லஸ் டேவஸ் சிறப்பாக ஆடினார். ஆட்டத்தின் 72ஆவது நிமிடத்தில் டேவஸ் அடித்த புயல் வேக உதை, நெதர்லாந்து கோல் காப்பாளரிடம் தஞ்சம் புகுந்தது. ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி, ஆட்டத்தின் 69ஆவது நிமிடத்தில் வெளியேற அவருக்கு மாற்று வீரராக கிரஸ் களமிறங்கினார்.

ஆட்டத்தின் கடைசி நிமிடம் வரை இரு அணிகளின் கோல் அடிக்கும் முயற்சி வீணானது. இறுதியில் 0-0 என்ற கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. நெதர்லாந்துத் தரப்பில் மூன்று வீரர்களுக்கும் ஆர்ஜென்ரீனாவில் இரண்டு வீரர்களுக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

முதல் சுற்றின் முடிவில் 'சி' பிரிவில் ஆர்ஜென்ரீனா, நெதர்லாந்து அணிகள் தலா 7 புள்ளிகள் பெற்றுள்ளன. இதே பிரிவில் இடம்பெற்ற மற்ற இரண்டு அணிகளான ஐவரிகோஸ்ட், சேர்பியா அணிகள் தொடரை விட்டு வெளியேறின.

### இன்றைய ஆட்டங்கள்

பிரிவு "எச்" : சவூதிஅரேபியா – ஸ்பெயின்
இடம் : கெய்சர்ஸ்லாடன்
நேரம் : இரவு 7.30 மணி

பிரிவு "எச்" : உக்ரைன் – துனிசியா
இடம் : பேர்லின்
நேரம் : இரவு 7.30 மணி

பிரிவு "ஜி" : டோகோ – பிரான்ஸ்
இடம் : கொலோன்
நேரம் : நள்ளிரவு 12.30 மணி

பிரிவு "ஜி" : சுவிற்ஸர்லாந்து – கொரியா
இடம் : ஹனோவர்
நேரம் : நள்ளிரவு 12.30 மணி

## ஈரானை வீழ்த்த முடியவில்லை; வாய்ப்பை இழந்தது அங்கோலா!



அங்கோலா, ஈரான் அணிகள் மோதிய மூன்றாவது லீக் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இதன் மூலம் இரு அணிகளும் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறின.

ஜேர்மனியில் நடந்துவரும் உலகக் கிண்ணத் தொடரின் லீக் ஆட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினம் 'டி' பிரிவில் இடம்பெற்ற ஈரான், அங்கோலா அணிகள் மோதின. முதல் இரண்டு லீக் ஆட்டங்களிலும் ஈரான் தோல்வியையும், அங்கோலா ஒரு தோல்வி, ஒரு சமநிலையையும் பெற்றிருந்தன.

எப்படியாவது வெற்றிபெற்று இரண்டாவது சுற்றில் நுழைய வேண்டும் என அங்கோலா போராடியது. அங்கோலா வீரர் அக்வா சிறப்பாகச் செயற்பட்டார். ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் 75 அடி தூரத்திலிருந்து கோல் கம்பத்தை நோக்கி அக்வா அடித்த அபார உதை கம்பத்தில் பட்டு வெளியேறியது. தொடர்ந்து சிறப்பாக விளையாடிய அக்வாவின் கோல் அடிக்கும் முயற்சி முதல் பாதியில் பல முறை வீணானது.

27ஆவது நிமிடத்தில் ஈரானுக்கு மூலை உதை வாய்ப்புக் கிடைத்தது. முன்னணி வீரர் வாகித் ஹாஸ்மைன் தலையால் முட்டி கோல் அடிக்க முயன்றார். ஆனால், அதை கோல் காப்பாளர் ரிக்கார்டோ தடுத்து விட்டார். முதல் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமல் ஏமாற்றம் அளித்தன.

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் அங்கோலாவுக்கு கிடைத்தது முன்னிலை. 60ஆவது நிமிடத்தில் அங்கோலாவின் ஜிகலங்கா அடித்த அந்தர உதை கோல் கம்பத்தில் பட்டுதிரும்பியது. வந்த வேகத்தில் தலையால் முட்டி கோலாக மாற்றினார் அமடோ பிளாவியோ. இதற்குப் பதிலடி தரும் விதமாக ஈரான் வீரர் சோரப் பாக்டியாரிசடே 75ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். ஆட்ட நேர இறுதி வரை இதே நிலை நீடிக்க 1-1 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது. இவ் ஆட்டத்தில் அங்கோலா வெற்றி பெற்றிருந்தால் 4 புள்ளிகளுடன் இரண்டாவது சுற்றில் நுழைய வாய்ப்பு அமைந்திருக்கும்.

## போராடி வென்றது போர்த்துக்கல்; மெக்சிக்கோவும் 2ஆம் சுற்றுக்கு!

மெக்சிக்கோவுக்கு எதிரான மூன்றாவது லீக் ஆட்டத்தில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் போராடி வெற்றி பெற்றது.

போர்த்துக்கலின் மனிச், சப்ரோஸா அசத்தலாக ஆடி கோல் அடித்தனர். இவ் ஆட்டத்தில் தோல்வி அடைந்தாலும் 'டி' பிரிவில் இரண்டாவது இடம் பெற்ற மெக்சிக்கோ உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது சுற்றில் நுழைந்தது.

கெல்சன்கிர்சனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது லீக் ஆட்டத்தில் 'டி' பிரிவைச் சேர்ந்த போர்த்துக்கல், மெக்சிக்கோ அணிகள் மோதின. முன்னதாக நடந்த இரண்டு லீக் ஆட்டங்களிலும் போர்த்துக்கல் வெற்றி பெற்றிருந்தது. மெக்சிக்கோ ஒரு வெற்றி, ஒரு சமநிலையையும் பதிவு செய்திருந்தது.

ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் மனிச் ஆட்டத்தின் முதல் கோலை அருமையாக அடித்தார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த போர்த்துக்கலுக்கு 22ஆவது நிமிடத்தில் மூலைஉதை வாய்ப்பு அமைந்தது. மூலை உதையைத் தடுக்க முற்பட்ட மெக்சிக்கோ வீரர் மார்கசின் கையில் பந்துபட, போர்த்துக்கலுக்கு 'பெனால்டி' வாய்ப்பு அமைந்தது. பெனால்டி வாய்ப் [illegible] ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோவின் பிராவோ மூலை உதையை அடிக்க, அதை தலையால் முட்டி கோலாக்கினார் ஜோஸ் போன்கசெகா. முதல் பாதியில் போர்த்துக்கல் 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

ஆட்டத்தின் 51ஆவது நிமி டத்தில் மெக்சிக்கோவுக்கு தடையற்ற உதை மூலம் வாய்ப்பு அமைந்தது. பார்டோ அதை நழுவவிட்டார். ஆனால், அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் மெக்சிக்கோவுக்கு அதிர்ஷ் டம் அமைந்தது. 'பெனால்டி' பகுதிக்குள் போர்த்துக்கல் வீரர் மிகலின் கையில் பந்துபட மெக்சிக்கோவுக்கு 'பெனால்டி' வாய்ப்புக் கிடைத்தது. மெக்சிக்கோ வீரர் பிராவோ பெனால்டி உதையை அடித்தார். ஆனால், அது கோல் கம்பத்துக்கு மேலே சென்றது. ஆட்டத்தின் 70ஆவது நிமிடத் தில் துடிப்புடன் ஆடி வந்த போர்த்துக்கலின் லூயிஸ் பிகோ வெளியேற அவருக்குப் மாற்று வீரராக போமார்ட் களமிறங்கினார்.

ஆட்ட நேர முடிவில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் மூலம் 'டி' பிரிவில் 9 புள்ளிகளுடன் போர்த்துக்கல் முதல் இடத்தைப் பெற்றது. மெக்சிகோ 4 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றது. இதன் மூலம் இவ்விரு அணிகளும் உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது சுற்றில் நுழைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்த்தகராறினால் ஒருவருக்கு கடி காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

அயலவர்களிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக ஒருவர் பலத்த கடிகாயங்களுக்கு உள்ளானார். இச்சம்பவம் பருத்துறையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை நவரட்ணராஜா (வயது 35) என்பவரே காயத் துக்குள்ளானவராவார். மேற்படி நபர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச் சைக்காக யாழ். போதனா வைத் திய சாலையில் சேர்க் கப் பட்டுள்ளார். (ரி)

## சிறுவர் நிலையங்களிற்கு முதலுதவிப் பெட்டிகள்

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் இயங்கும் சிறுவர் நலமையங்களிற்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வுதவிகள் முதற் கட்டமாக ஊர்காவற்றுறையில் இயங்கும் மூன்று சிறுவர் மையங்களிற்கு வழங்கப் பட்டுள்ளன. இதே வேளை இந்நிறுவனத்தினால் நுளம்பு வலைகள், சப்பாத்துக்கள் போன்ற பொருள்களும் அடுத்த கட்டமாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (204-ரி)

## தமிழ்மொழித்தின சுற்றுநிருபம்

தென்மராட்சி,ஜூன்23

இந்த வருடத்திற்குரிய (2006) தமிழ்மொழித்தினம் தொடர்பான சுற்றுநிருபம் கல்வி அமைச்சினால் வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இந்தச் சுற்று நிருபத்தினை அந்தந்தக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது . (117)

## விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஜூன்23

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் எயிட்ஸ் விழிப்புணர்வுக்கருத்தரங்குகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

இக்கருத்தரங்குகள் வீடியோப் படக் காட்சிகள் /குழுக் கலந்துரையாடல்கள் வாழ்க்கைத்திறன் அடிப்படைக் கல்வி முறைகள் போன்ற முறைகள் மூலம் செயல்முறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வியாபாரி மூலை நக்கீரன் கிராமத்தில் விழிப்புணர்விற்கான பயிற்சிப் பட்டறையொன்று இடம்பெறவுள்ளது.

காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் கிராம மக்கள் அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர் (204)

## மாணவரை ஊக்குவிக்க விழிப்புணர்வு வாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்.கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒவ்வொரு மாணவனுக்குமான கல்வி' என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு வாரத்தை அனுஷ்டித்து வருகிறது.

இந்த நிகழ்வை முன்னிட்டு மாணவர்களுக்கு கல்வியை வழங்குவது அவசியம், சிறுவர்களை வேலைக்கமர்த்துவது, துஷ் பிரயோகத்துக்குட்படுத்துவது போன்றன தவிர்க்கப்பட வேண்டும் என்னும் பொருளில் அமைந்த துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. (204)


## கண்ணீர் அஞ்சலி

யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியை
திருமதி கௌ.இராமநாதன் அவர்களின் அன்புத் தாய்
திருமதி **செல்லம்மா தாமோதரம்பிள்ளை**
அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்**

(51506) (21.45.15)


சமாதானத்தை அடைவதற்கான சர்வதேச விழுமியங்களை தேசிய சமாதானப் பேரவை அங்கீகரிக்கின்றது

# யுத்தம் மீண்டும் உருவாகுவதைத் தடுக்க தேவைப்படுவது என்ன?

எமது மனங்களை அதிரச் செய்யும் வேதனை தரும் நிகழ்வுகளுடன் நாடு யுத்த நிலைமையை நோக்கி பயணம் செய்வதாகத் தோன்றுகின்றது. இந்நிலையில் நாம் சமாதானத்திற்காக எப்பாதையை நாடி நிற்கின்றோம் என்பதை மீண்டும் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. வன்முறை நடவடிக்கைகள் காரணமாக ஒவ்வொரு நாளும் வெறுப்புமிக்கதாக மாறிவிட்டது. இவ் வன்முறைகள் பற்றிய பொறுப்புக்கள் மறுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கூட எம்மோடு செயற்படுகின்ற சர்வதேச சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்புடன் சகலரும் சமாதானம் மற்றும் கௌரவத்துடன் வாழக் கூடியதொரு வழியை அமைப்பதற்கான சந்தர்ப்பம் இன்னும் இருக்கின்றது என நாம் நம்புகின்றோம்.

சமாதானச் செயற்பாட்டை முன்னெடுப்பதே இலங்கைக்கான ஒரே வழி என்பதை வலியுறுத்தும் இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகத்தின் கருத்திற்கு செவிசாய்க்குமாறு அரசாங்கத்தையும் எல்.ரீ.ரீ.ஈயையும் தேசிய சமாதானப் பேரவை வேண்டிக்கொள்கின்றது.

கடந்த 2006 மே 30ம் திகதி கூடிய ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளை உள்ளடக்கிய கூட்டுத் தலைமைகளின் மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தை வாசிக்குமாறு சகலரையும் கேட்டுக்கொள்கின்றோம். யுத்தம் மீண்டும் உருவாவதைத் தடுப்பதற்காகச் செய்ய வேண்டியது என்ன என்பதையிட்டு தெளிவானதொரு விளக்கத்தினை சகலரும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக மேற்கூறப்பட்ட பிரகடனத்தை முழுமையானவாறு கீழே பிரசுரிக்கின்றோம்.

## ரோக்கியோ இணையத் தலைமை நாடுகள் இலங்கையை யுத்த விளிம்பிலிருந்து பின்வாங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையின் சமாதான வழிமுறைக்கான இணைத் தலைமை நாடுகளான -ஐரோப்பிய யூனியன், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே ஆகியன மே மாதம் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ரோக்கியோவில் சந்தித்தன. இந்த சந்திப்பை அடுத்து விடுக்கப்பட்ட அறிக்கையில், இணையத் தலைமை நாடுகள் சீரழிந்து வரும் நிலைமையை மாற்றி நாட்டை சமாதானப் பாதையில் மீண்டும் இட்டுச் செல்ல உடனடி நடவடிக்கைகளை எடுக்குமறு அரசாங்கத்தையும், எல்ரிரிஈயையும் வலியுறுத்தியுள்ளன.

இலங்கை யுத்த விளிம்பில் இருக்கும் காலகட்டத்தில் இணைத் தலைமைகள் இன்று ரோக்கியோவில் கூடின. புனரமைப்பு, அபிவிருத்தி சம்பந்தமான முதல் ரோக்கியோ மாநாடு கூடப்பட்டு மூன்று ஆண்டுகளின் பின்னர் இந்தக் கூட்டத்தை ஜப்பான் ஏற்பாடு செய்துள்ளது. இலங்கை அரசாங்கமும் எல்ரிரிஈயும் வன்முறைக்குள் மீளச் செய்வதைத் தடுக்க முடியாத நிலையில் இருப்பது போன்று காணப்படுகையில், இலங்கையின் நெருக்கடிக்கு தீர்வுகான பயனுள்ள வகையில் உதவ முடியுமா என்று இணைத் தலைமை நாடுகளான ஐரோப்பிய யூனியன், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே என்பன தீர்மானிப்பதற்காக இந்த மாநாட்டைக் கூட்டியுள்ளன.

இணைத் தலைமைகள் சீரழிந்து வரும் நிலைமையை மாற்றி, நாட்டை மீண்டும் சமாதானப் பாதையில் இட்டுச் செல்ல உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு இரு தரப்பினரையும் கேட்டுள்ளன.

எல்ரிரிஈ மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேண்டும். அது பயங்கரவாதத்தையும், வன்முறையையும் கைவிட வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு காண இது தேவையான அரசியல் இணக்கப்பாட்டை மேற்கொள்ள விரும்புவதைக் காண்பித்தல் வேண்டும்.

இந்தத் தீர்வானது, இலங்கையின் சகல மக்களினதும் ஜனநாயக உரிமைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். சர்வதேச சமூகம் இந்த நடவடிக்கைக்கு சாதகமாக நடந்து கொள்ளும். அவ்வாறில்லாவிடின் எல்ரிரிஈ தனித்து விடப்படும். அரசாங்கம் தமிழர்களின் சட்டபூர்வ உரிமை வழங்கும் என்பதைப் புலப்படுத்த வேண்டும். அதன் பிரதேசத்தில் தளம் கொண்டிருக்கும் குழுக்களை வன்முறைகள், பயங்கரவாத நடவடிக்கைகள் என்பவற்றில் ஈடுபடுவதை உடனடியாக தடுத்தல் வேண்டும்.

நாடு முழுவதிலும் தமிழ் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் காப்பாற்றுவதுடன் அத்துமீறல் செய்பவர்கள் கண்டிப்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும். முஸ்லிம்கள் உள்ளிட்ட சகல இலங்கையர்களினதும் உரிமைகளை மேம்படுத்தும் புதிய நிர்வாக அமைப்பைக் கொண்டு வருவதற்கு பாரிய அரசியல் மாற்றங்களை செய்யத் தயாராக இருப்பதைக் காண்பித்தல் வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கும். தவறினால் சர்வதேச ஆதரவு குறையும்.

இரு தரப்பினருக்கும் பொறுப்புகள் உள்ளன. அவற்றை நிறைவேற்ற அவை தவறிவிட்டன என்று இணைத் தலைமைகள் கருதுகின்றன. ஜெனீவாவில் 2006 இல் தெரிவித்த கடப்பாடுகளும் இந்தப் பொறுப்புகளில் அடங்கும். பல பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எல்ரிரிஈ பொறுப்பாகவுள்ளது. கருணா உட்பட ஆயுதம் தாங்கிய குழுக்களினது தாக்குதல்களையும், ஈ.பி.டி.பி போன்ற வன்முறை சக்திகளையும் தடுக்க அரசாங்கம் தவறிவிட்டது.

எழுத்துள்ள வன்முறைகள் பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு மத்தியில் மாத்திரமல்லாது அப்பாவி பொது மக்களின் உயிர்களையும் பாழடித்து அல்லது பறிக்குமளவிற்கு விரிவடைந்துள்ளது. இது சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து பாதிக்கப்பட்ட மக்களிடையே பயங்கரவாதத்திற்கு வழி வகுத்துள்ளது. ஐ.நாடும் ஏனைய அமைப்புகளும், அண்மையில் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் பற்றி மதிப்பீட்டுள்ளன.

மனித உரிமைகளை மதித்து மனித உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க முற்படுமாறு இணைத் தலைமைகள் சகல தரப்பினரையும் கேட்டுள்ளன.

பகைமை பூண்டுள்ள இரு தரப்பினரும் சகல வன்முறைகளையும் கைவிட்டு, சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமது வேறுபாடுகளைத் தீர்க்க முன்வராவிடின் நிலைமை காப்பாற்றப்படமுடியாது. நாடு மேலும் சச்சரவுக்குள் தள்ளப்படும்.

நிலைமை மிகுந்த கவலையை ஏற்படுத்துகின்ற போதிலும் சமாதானத் தீர்வுக்கான அம்சங்கள் இன்னமும் இருப்பதாக இணைத் தலைமை நாடுகள் முடிவு செய்துள்ளன. இலங்கையில் பெரும்பான்மையானோர் சமாதானத்தையே நாடுவார்கள்.

தற்போதுள்ள நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிக்கு உதவ சகல சாத்தியமான வழிகளிலும் தமக்குள்ள கட்டுப்பாட்டை சகல இணைத் தலைமைகளும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன. ஏனைய நாடுகளும், அமைப்புகளும் இக்கருத்தையே கொண்டிருக்கின்றன. இணைத் தலைமை நாடுகளின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க அவை விருப்பம் கொண்டுள்ளன.

இந்த வகையில் மூன்று ஆண்டுகளின் முன்னர் ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றியவர்கள் வரையறை செய்த துறைகளுக்கு உட்பட்டதாக பணியை மேம்படுத்த ஏனைய நாடுகளின் குழுக்களுக்கு வேலைகளை ஒதுக்கும் வழிவகைகள் பற்றி இணைத் தலைமைகள் ஆராயும்.

இலங்கையின் தமிழ், முஸ்லிம் மக்கள் தமக்கு இன்னமும் போதிய அளவில் நிவாரணம் வழங்கப்படாத கணிசமான குறைபாடுகள் இருப்பது பற்றி நியாயப்படுத்தி நிரூபித்துள்ளனர். சிறுபான்மையினரின் குறைபாடுகளைத் தீர்க்கவும், பல்வேறு சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கையை கட்டி எழுப்பும் இலங்கை அரசாங்கம் மேலும் திட்டவட்டமான கொள்கைகளை விருத்தி செய்ய இணைத் தலைமைகள் தூண்டுகின்றன. இத்தகைய கொள்கைகளை அமுல் செய்ய அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு இணைத் தலைமைகளும் சர்வதேச சமூகமும் ஆதரவு வழங்கும்.

முதல் ரோக்கியோ மாநாட்டின் பின்னரான மூன்று ஆண்டு காலப் பணியானது சர்வதேச சமூகம் ஆதரவு தர முடியும். ஆனால் சமாதானத்தை அதனால் வழங்க முடியாது என்பதைக் காண்பித்துள்ளது. இலங்கையர்களால் மாத்திரமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் சமாதானத்தை ஏற்படுத்த தமக்கு தாமே உதவ விரும்பினால் மாத்திரமே இணைத் தலைமை நாடுகளின் பங்கு பயனுள்ளதாகும்.

வெற்றிகரமாக பேச்சுக்கள் நடந்த 2002 - 2003 காலப்பகுதியில் எதிர்கால சமாதானத்திற்கான அடிப்படை கோட்பாடுகள் குறித்து இரு தரப்பினரும் இணக்கம் கண்டனர். போர் - நிறுத்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட இந்தக் கோட்பாடுகள், ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் எடுக்கப்பட்டது. 2006 பெப்ரவரி ஜெனீவா மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டதுமான தீர்மானங்கள் என்பவற்றிற்கான தமது கடப்பாடுகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டும்.

இந்த வகையில், இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாப்பதும், பாதுகாப்பை உறுதிப்படுத்துவம், தமிழ் மக்களினதும், ஏன் முஸ்லிம் மக்களினதும் சட்டபூர்வ அபிலாட்சைகளைப் பூர்த்தி செய்வதும், ஜனநாயகம், மனித உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதும் சகல சமூகங்களினாலும் ஏற்றுக் . கொள்ளத் தக்கதுமான, சம்பந்தப்பட்ட தரப்பினரால் இணைக்கப்பட்ட எந்த ஒரு தீர்வுக்கும் இணைத் தலைமைகள் ஆதரவு வழங்கும்.

நோர்வே தரப்பினர்கள் மீண்டும் பேச்சுக்களில் கலந்து கொள்ள பல தூண்டுதல்களைத் தயாரித்துள்ளது அவை விரைவில் வெளியிடப்பட்டன. இந்த முயற்சிகளை இணைத் தலைமைகள் வரவேற்கின்றன.

பிரச்சினைக்கான தீர்வு மோதல் மூலம் ஏற்படமாட்டாது. இலங்கை வரலாறு, யுத்தம் மூலம் எந்த ஒரு தரப்பினராலும் வெல்லப்படக் கூடியது அல்ல என்பதைக் காண்பித்துள்ளது. அது பிரஜைகளுக்குப் பாரிய துன்பங்களையே ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கடப்பாடு, கற்பனை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பனவே தீர்வைக் காணத் தேவைப்படுகின்றன. இதற்கான பொறுப்பு இலங்கை அரசாங்கத்திடமும் எல்ரிரிஈயிடமும் உள்ளன.

சமாதான வழிமுறைக்கு, மத்தியஸ்தராக நோர்வே வகிக்கும் முக்கிய பங்கிற்கு இணைத்தலைமை நாடுகள் மீண்டும் அவற்றின் ஆதரவைத் தெரிவிக்கின்றன. கஷ்டங்கள் அதிகரித்து வரும் நிலைமையில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு ஆற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் அது ஆதரவு தெரிவிக்கிறது. இதேவேளையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பங்கை எவ்வாறு வலுப்படுத்துவது என்றும் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

ரோக்கியோ உறுதிமொழிகளின் அடிப்படையிலும் சுனாமி நிதியமாகவும் உதவி வழங்கும் நாடுகள் 340 கோடி டொலர்களுக்கும் கூடுதலான தொகையை வழங்கியுள்ளதையும் இணைத் தலைமைகள் குறிப்பிட விரும்புகின்றன. எல்ரிரிஈயின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் உட்பட வடக்கு கிழக்கிற்கு இந்த உதவியில் 20 சதவீதத்திற்கும் கூடுதலான நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவி இலங்கை மக்களின் ஜீவனோபாயத்தை மேம்படுத்த உதவியுள்ளது.

இரு தரப்பினரும் தமது நடவடிக்கைகள் மூலம் போர் நிறுத்த உடன்படிக்கைக்கான கடப்பாட்டை நிரூபிக்கும் பட்சத்தில் சர்வதேச சமூகம் மனிதாபிமான உதவியுடன் மேலதிகமான உதவியைத் தொடர்ந்தும் வழங்கும். சுகாதாரம், கல்வி அபிவிருத்தி ஆகியவை மேம்படுத்தப்படுவது போன்ற நம்பிக்கையைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த முக்கிய தேவைகளை பூர்த்தி செய்யும் முயற்சிகளுக்கு, உதவ இணைத் தலைமைகள் நிதி வழங்க முடியும்.

ஐ.நா, செஞ்சிலுவைச்சங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சிவில் சமூகம் என்பனவற்றின் தொடரான ஆக்கபூாவமான ஈடுபாடும் சமாதான வழிமுறைக்கு அவசியம் என்று இணைத்தலைமை நாடுகள் மீண்டும் வலியுறுத்துகின்றன. எனினும், இவற்றின் மீது சமீபகாலங்களில் விமர்சனங்கள் அதிகரித்திருப்பதுடன், பகிரங்க எதிர்ப்புகளும் எழுந்துள்ளன. இணைத்தலைமைகள் இந்த எதிர்ப்புக்களை பலமாகக் கண்டிக்கின்றன. இலங்கைக்கான அவற்றின் ஆக்கபூர்வமான பணி தொடரும் வகையில் இலங்கை அரசாங்கமும் எல்ரிரிஈ அவற்றிக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஐ.நா. மற்றும் இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக்குழு போன்ற மனித உரிமைகளைக் கண்காணிக்கும் ஏஜென்சிகளின் கண்டுபிடிப்புக்களை இணைத்தலைமைகள் உன்னிப்பாக அவதானிக்கும்.

மூன்று ஆண்டுகளின் முன்னர் முதலாவது ரோக்கியோ மாநாட்டில் சமாதான வழிமுறைக்கு உதவுமாறு சர்வதேச சமூகம் கேட்டுக் கொள்ளப்பட்டது.. இந்த வழிமுறைக்கான முக்கிய அம்சங்கள், நோர்வேயின் மத்தியஸ்தம், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்புப் பங்கு, இணைத் தலைமைகள், உதவி வழங்கும் நாடுகளிலிருந்து கணிசமான அளவு உதவி வந்து சேர்தல் என்பனவாகும்.

சர்வதேச சமூகம், மூன்று ஆண்டுகளின் முன்னர் இணங்கிய உதவி வழங்கும் பங்கை நிறைவேற்றும் கடமையைக் கொண்டிருக்கிறது. ஆனால், யுத்தத்தை தவிர்க்க வேண்டுமானால், அரசாங்கமும், எல்ரிரிஈயும் தமது தரப்பில் உறுதியளித்தனவற்றை கடைப்பிடிக்க வேண்டும் என்று அது பதிலுக்கு எதிர்பார்க்கிறது.

( மேலுள்ள செய்தியானது ஆங்கிலப் பிரசுரத்தின் மொழிபெயர்பாகும். பந்திகளின் முக்கியத்துவம் தடித்த எழுத்துக்களால் எம்மால் வழங்கப்பட்டுள்ளது. )

*Published by The National Peace Council. The National Peace Council of Sri Lanka was registered as a Voluntary Social Services/Non-Governmental Organisation under Voluntary Social Services Organisations (Registration & Supervision) Act No. 31 of 1980 as amended by Act No. 8 of 1998 was incorporated as a Limited Company under the Companies Act No. 17 of 1982 on the 24th June, 2004.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களின் சம்பளம் கிடுகிடு உயர்வு

கொழும்பு,ஜூன்23

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின தும் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பிரே ரணையொன்றை அரசாங்கம் நாடாளுமன் றத்தில் சமர்ப்பித்திருக்கிறது.

அமைச்சரவை அனுமதியின் பின்னர் நடாளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் இந்தப் பிரேரணை சேர்க்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதிக்கு தற்போது வழங் கப்படும் மாதாந்த ஊதியமான 25,000 ரூபா இவ்வருடம் ஜனவரியிலிருந்து 61,250 ரூபாவாகவும், அடுத்த வருடம் ஜனவரியிலி ருந்து 97,500 ரூபாவாகவும் உயர்த்தப்பட வுள்ளது.

பிரதமருக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த ஊதியமான 34,000 ரூபா இவ் வருடம் ஜனவரியிலிருந்து 53,500 ரூபா வாகவும், அடுத்த வருடம் ஜனவரியிலிருந்து 71,500 ரூபாவாகவும் உயர்த்தப்படவுள்ளது.

சபாநாயகருக்கு தற்போது வழங்கப் படும் மாதாந்த ஊதியமான 31,800 ரூபா இவ்வருடம் ஜனவரியிலிருந்து 50,900 ரூபாவாகவும், அடுத்தவருடம் ஜனவரியி லிருந்து 68,500 ரூபாவாகவும் உயர்த்தப்பட வுள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள மற்றும் அந்தஸ்தற்ற அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு தற்போது வழங் கப்படும் மாதச் சம்பளமான 29,815 ரூபா, இவ்வருட ஜனவரி முதல் 47,407 ரூபாவாக வும், அடுத்த வருடம் ஜனவரி முதல் 65,000 ரூபாவாகவும் உயர்த்தப்படவுள்ளது.

பிரதியமைச்சர்கள், பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகி யோர் தற்போது பெறும் மாத ஊதியமான 28,750 ரூபா, இவ்வருடம் ஜனவரியிலி ருந்து 46,125 ரூபாவாகவும் அடுத்த வரு டம் ஜனவரியிலிருந்து 63,500 ரூபாவாக வும் உயர்த்தப் [illegible]ள்ளது.

நாடாளுமனற உறுப்பினர்களுக்கு தற் போது வழங்கப்படும் மாதச்சம்பளமான 22,100 ரூபா இவ்வருடம் ஜனவரியிலி ருந்து 38,192 ரூபாவாகவும், அடுத்தவரு டம் ஜனவரியிலிருந்து 54,285 ரூபாவாக வும் உயர்த்தப்படவுள்ளது.

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள சம் பள முறைமை இவ்வருட ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருவதால் இவ்வருடத்தில் இதுவரை வழங்கப்படவேண்டிய நிலுவை களை இரண்டு தவணைகளில் வழங்குவதற் கும் அரசு உத்தேசித்திருக்கிறது.

ஜனாதிபதி மற்றும் இதர அரசியற் பிர முகர்களின் புதிய சம்பள முறைமை, நீதித் துறைசார் பதவிகளின் சம்பள முறைமை களை ஒத்ததாகவே வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி பிரதமரின் திருத்தப்பட்ட சம் பளம், பிரதம நீதியரசரின் மாதாந்த சம்ப ளத்தை ஒத்ததாகவும், சபாநாயகரின் திருத் தப்பட்ட சம்பளம், சட்டமா அதிபரின் மாதாந்த சம்பளத்தை ஒத்ததாகவும் அமையும்.

அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் சம்பளம், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் மாதாந்த சம்பளத்தை ஒத்ததாகவும் பிரதியமைச்சர் கள், பிரதிச்சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித்தலைவர் ஆகியோரது மாதாந்த ஊதியம், மேன்முறையீட்டு நீதியரசர்களின் மாதாந்த ஊதியத்தை ஒத்ததாகவும் அமை யும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் திருத் தப்பட்ட மாதச் சம்பளம், மேல் நீதிபதிகளின் ஆரம்ப சம்பளத்தை ஒத்ததாக அமையு மென்பது குறிப்பிடத்தக்கது. (க)

# கொல்லப்பட்ட தமிழர்களுக்காக சபையில் அஞ்சலி

கொழும்பு, ஜூன் 23

அரச படைகள் மற்றும் துணைப்படை களால் வடக்கு - கிழக்கில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒரு நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமை யில் நேற்றுக் காலை கூடியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், வடக்க - கிழக்கில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்துக் கவலை தெரி வித்து உரையாற்றினார்.

இதனையடுத்து, தமிழ் மக்களின் படு கொலைக்காக சபையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட வேண்டுமென்று சம் பந்தன் எம்.பி. விடுத்த கோரிக்கையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டார்.

இதனையடுத்து, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய உட்பட்ட அனைத்துக் கட்சிகளி னதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். நேற்று முன்தினம், கெப்பிட்டிக்கொல்லாவவில் சிங்கள மக்கள் கொல்லப்பட்டமைக்கு ஜே.வி.பியினர் நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. (க)

# புதிதாக நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியருக்கு கற்பித்தல் தொழில்நுட்பப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஜூன்23

யாழ். மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப் பட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு கற்பித்தல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி வள ஆளணியினரால் விரைவில் நடத்தப்பட வுள்ளது.

முதற்கட்டமாக வள ஆளணியினருக் கான விசேட வேலைப்பட்டறை வவுனியா வில் 'நிக்கொட்' நிதியுதவியுடன் நான்கு நாள்கள் நடத்தப்படும்.

இந்தப் பயிற்சிப்பட்டறை நேற்று ஆரம் பமானது. எதிர்வரும் 25 ஆம் திகதிவரை வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

யாழ். மாவட்டத்தில் 5 கல்வி வலயங் களிலும் இருந்தும் ஆங்கில மொழி புலமை யில் தகுதிபெற்ற ஆசிரியர்கள் மேற்படி பயிற் சிப் பட்டறைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வள ஆளணியினருக்கான ஆங் கில மொழியாற்றல் பயிற்சிப் பட்டறையை மாகாணக் கல்வி அமைச்சு ஒழுங்குசெய் துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (185)

# சித்தன்கேணி நேருஜி நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் செப்ரெம்பரில்

வலி.மேற்கு,ஜூன்23

கலைநகர், சித்தன்கேணி நேருஜி சன சமூக நிலையத்தின் பொன்விழா செப்ரெம் பர் மாதம் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சனசமூக நிலைய நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர்.

கலைநகர் நேருஜி சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் ஒக்ரோ பர் மாதம் 19ஆம் திகதி பூர்த்தியடைகின் றது. இதனையொட்டி பொன்விழா செப்ரெம் பர் மாதம் மிகச் சிறப்பாக நடைபெறவுள் ளது. பொன்விழாவையொட்டி வலிகாமம் மேற்குப் பிரதேச சபை மட்டத்தில் பல தரப் பட்ட போட்டிகள் நடத்தப்படவுள்ளன. சன சமூக நிலையத்தின் வரலாற்றினைக் கொண்ட மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. பொன்விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக இந்த ஆண்டு காலபூஷணம் விருது பெற்ற இவ் வூரைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் சீ.செந்தூர் ராசா கௌரவிக்கப்படவுள்ளார்.

பொன்விழாவினை சிறப்பாக நடத்துவ தற்கு சனசமூக நிலைய நிர்வாகத்தினருடன் பதினொரு பேர் கொண்ட குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (175)

# பழைய மாணவர் நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்23

புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக மா.ஞானப்பிரகாசம், செய லாளராக தே.லிவிங்ஸ்டன், பொருளாளராக வி.நிர்மலன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட் டனர். (204)

# சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி மாணவர்களிடையே பேச்சுப் போட்டி

சர்வதேச சிறுவர் தினம் - 2006 தொடர் பாக கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9 வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையில் பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் பிரதேச செயலக மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என நட் தப்படவுள்ளன.

ஒரு பாடசாலையில் ஒரு மாணவர் வீதம் போட்டியில் பங்குபற்றமுடியும் எனவும் இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக் குத் தோற்றிய மாணவர்கள் போட்டியில் பங்குபற்ற முடியாது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

'சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்', 'சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்போம்', 'சிறுவரை இம்சைப்படுத்துவதையும் தாக்கு வதையும் நிறுத்துவோம்', 'யுத்தத்தின் கோர வதைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப் போம்', 'அழகிய சிறுவர் உலகின் நாளைய தினத்தைப் பாதுகாப்போம்' ஆகிய தலைப் பில் பத்து நிமிடங்கள் பேச்சுப் போட்டி நடத் தப்படும்.

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை கள் இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்களின் விவரங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் -

போட்டிகள் ஜூலை முதலாம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படுமென வும் - வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல் வராசா தெரிவித்துள்ளார். (117)

# சட்டவிரோத மணல் அகழ்வு மேலும் ஒருவர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஜூன்23

அரியாலை, நெடுங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்பவர்களுக் கும் தடுப்பவர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் நேற்றுமுன்தினமும் ஒருவர் படு காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மணல் அகழ்வோரின் தாக்குதலில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தில் பணி புரியும் எஸ்.காண்டீபன் (வயது27) என் பவரே தோளிலும் கால்களிலும் பலத்த அடிகாயங் களுக்குள்ளானார்.

தொடர்ச்சியாக சமீபகாலங்களில் இடம் பெற்றுவரும் இச்சமூகவிரோத செயற்பாட் டில் ஈடுபட்டவர்களால் பலர் காயப்பட்டதும் நையப்புடைக்கப்பட்டதும் தெரிந்ததே. (ரி)

# கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலை அதிபர், ஆசிரியருக்கு ஊக்குவிப்புப்படி

அச்சுவேலி, ஜூன்23

கஷ்டப் பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு ஊக்கு விப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய ஊக்குவிப்புக் கொடுப் பனவு தொடர்பான உத்தேச மதிப்பீட்டுத் தொகை குறித்த அறிக்கை பிரதம செய லாளர்கள் மற்றும் மாகாணக் கல்வி அமைச் சின் செயலாளர்களுக்கு திறைசேரிப் பணிப் பாளர் அனுப்பிவைத்துள்ளார்.

அதிகஷ்டப் பிரதேசங்களில் கடமை புரிபவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப் பனவாக மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபா வும் -

கஷ்டப் பிரதேசங்களில் கடமை புரிபவர் களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந் தம் ஆயிரத்து 500 ரூபாவும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூடிய விரைவில் ஊக்குவிப்புக் கொடுப் பனவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப் படும் என்று கல்வி அமைச்சின் உயர் அதி காரி ஒருவர் தெரிவித்தார்.




உரும்பிராய் இந்துக் கல்லூரியின் 'வித்தியா' சஞ்சிகைவெளியீடும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் வி.பி.சிவநாதன் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க ப.தனஞ்சயன் பெற்றுக்கொள்வதையும் அருகில் அதிபர் அ.ஈஸ்வரநாதன், இதழாசிரியர் அன்ரனி பீற்றர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (204)

# உலக உணவுத் திட்டப் பணிகளுக்கென உள்ளூராட்சி சபைகளுக்கு உபகரணங்கள்

தென்மராட்சி,ஜூன்23

உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள் ளப்பட்டுவரும் உலக உணவுத் திட்ட வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கான பொருள்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

வேலைத்திட்டத்திற்குப் பயன்படுத்தும் சுத்தியல்கள், மண்வெட்டிகள், கோடரிகள், கத்திகள், தள்ளுவண்டிகள், கடகங்கள், அலவாங்குகள் உட்படப் பல பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இப்பொருள்களை நாவற்குழியிலுள்ள உலக உணவுத் திட்டக் களஞ்சியத்தில் பெற் றுக்கொள்ளுமாறு உள்ளூராட்சி சபை செய லாளர்களுக்கு [illegible] டப் பணிப்பா[illegible] ளார். (117-204)

# நெடுந்தீவு மேற்குக்கான மின்வேலைகள் ஸ்தம்பிதம்

நல்லூர்,ஜூன்23

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விநியோகம் தொடர்பான விஸ்தரிப்பு வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

விஸ்தரிப்பு வேலைகள் 80 வீதம் நிறை [illegible] இன்னும் குறைந்த அளவு வேலைகளே பூர்த்தியாக இருக்கும் தருணத் தில் இந்த வேலைகளில் ஈடுபட்டு வந்த மின் சார சபையின் ஊழியர்கள் தீவுப் பகுதியில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள், நாட்டுச் சூழல் காரணமாக நெடுந்தீவுக்குச் சென்று மிகுதி வேலைகளைப் பூர்த்தியாக்கத் தயங்குவதா கத் தெரிகின்றது. கடந்த மார்ச் மாதத்திற்குள் நெடுந்தீவுக்கான மின்சார விநியோக விஸ் தரிப்புப் பணிகள் பூர்த்தியடைந்துவிடும் என இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரிவு அதிகாரி தெரிவித்திருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (111)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**வெளிவந்துவிட்டது!**

## மனிதர்கள்

**மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 12 நவீன நாடகங்கள்**



கலாபூஷணம்
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 21ஆவது நூல்
176 பக்கங்கள் ரூபா 200.00

(51450)(32-19-17)

## பதவி உயர்வு வழங்குவதற்கான தமிழ்மொழி மூல செயலமர்வு

ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்குவது தொடர்பான, தமிழ் மொழி மூல செயலமர்வு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கணக்காளர்கள், வலய நிர்வாக அதிகாரிகள் ஆகியோருக்கு நடத்தப்படவுள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மத்திய கல்வி அமைச்சில் நடைபெறும். வடக்கு - கிழக்கு உள்ளிட்ட தமிழ்ப் பிரதேச வலயக் கல்வி உயரதிகாரிகள் இந்தச் செயலமர்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மாகாணக் கல்வி அமைச்சினாலும் மத்திய கல்வி அமைச்சினாலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதே வேளை - சிங்கள மொழி மூலமான செயலமர்வுகள் கடந்த மாதம் நடைபெற்றது. தமிழ் மொழி மூலமான செயலமர்வுகள் கடந்த மாதம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பின்னர் அவை பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(204-11)

## தேவை

வீடியோ போட்டோ செய்வதற்கு அனுபவம் உடைய ஒருவர் தேவை.
நீர்வேலிக்கு அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு:
**"திருமுருகன்"**
நீர்வேலி.
T.P.: 077 6660211

(51465)(32-19-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 27 - 11 - 1906

ஆண்டவன் அடியில் 03 - 07 - 2005



### திருமதி சின்னம்மா நமசிவாயம்

திதி: அபர திரயோதசி - 28.06.2006

**"வீற்றிருந்தாள் அன்னையவள் வீதிதனில் வீற்றிருந்தாள்
நேற்றிருந்தாள் அன்னையவள் இன்று மண்ணில் நீறானாள்"**

நூறாண்டு காலம் நோய்நொடியின்றி வாழ்வீர்கள் என்றிருந்தோம்!
ஓராண்டு முன்னதாக ஒரு நொடிப் பொழுதில் மறைந்தீர்களோ!
ஆலமரமாய் இருந்து எம்மைக் காத்த தெய்வமே!
விழுதுகள் என்றும் உங்கள் நினைவில் விழிநீருடன்...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"இந்திரகிரி"
வதிரி, கரவெட்டி. (51431) (39-32-19-17) -குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
### இராசலிங்கம் இராசாத்தி

மலர்வு 10-11-1951 | உதிர்வு 25-05-2006

25-05-2006அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (24-06-2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

✱ நாட்டின் சூழ்நிலை காரணமாக அழைப்பிதழ் கிடைக்கத் தவறியவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுச் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பத்திரகாளி கோயிலடி,
தாவடி தெற்கு,
கொக்குவில். - குடும்பத்தினர்.
(51409)(32-19-17)

IIS IIS IIS IIS IIS

# IIS COMPUTER COURSES

## A/L 2006 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

**உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்**

**சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனிநிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்**

**New Batches Start on :**

Batch 1 [ Weekday ] : 23.06.2006
Batch 2 [ Weekend ] : 01.07. 2006
Batch 3 [ Weekday ] : 10.07. 2006
Batch 4 [ Weekend ] : 23.07. 2006
at 09.30 A.M.

**Diploma Courses**

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Computer Programming
- Diploma in Eng. Drawing & AutoCAD

**சிறப்புக் கட்டணச் சலுகையில் கணனிக் கற்கைநெறிகள்
சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்**

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

**INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)**
#100, Clock Tower Road, Jaffna
Tel : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iisc@sltnet.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எலும்பு முறிவு ஏற்பட்டோரைப் பாதுகாக்க சுகாதார சேவையினர் கூறும் அறிவுரைகள்

கிளிநொச்சி,ஜூன்23

தற்போது இடம்பெற்றுவரும் அசாதாரண சூழல் காரணமாக மக்களுக்கு ஏற்படும் எலும்பு முறிவு பற்றியும் எலும்பு முறிவு ஏற்பட்ட பின்னர் செய்யவேண்டிய சிகிச்சை பற்றியும் தமிழீழ சுகாதார சேவையினர் முதலுதவிச் சிகிச்சை பற்றிய குறிப்பொன்றை மக்களிடையே வழங்கி வருகின்றனர்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள சிகிச்சை விவரங்கள் வருமாறு:-

தற்போது தாயகப் பகுதியெங்கும் போருக்கான புறநிலைச் சூழல் உருவாகிவருவதை அவதானிக்க முடிகின்றது. எனவே, தாயகப் பகுதி மக்களாகிய நாம் இப்போரனர்த்தங்களான ஷெல் வீச்சு, கிளைமோர், துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள், விமானக் குண்டு வீச்சு ஆகியனவற்றினால் ஏற்படக்கூடிய எலும்பு முறிவுக் காயங்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியமை ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும். எலும்பு முறிவுக் காயங்களிலிருந்து பாதுகாப்பதற்கான முன்னுதவிச் செயற்பாடுகள் பற்றி நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

எலும்பு ஒடிவது, பிளவுபடுவதைக் குறிப்பிடுவதே முறிவு எனப்படும். இம்முறிவு மூடிய முறிவு, திறந்த முறிவு என இருவகையாகப் பிரிக்கப்படுகின்றது. முறிவிற்கான காரணங்களாக பின்வருவன கூறப்படுகின்றன. நேரடியான தாக்குதல், மறைமுகத் தாக்குதல், தசைநார் அசைவினால் முறிவு, நேரடி மறைமுகத் தாக்குதல் ஆகிய இரண்டும் சேர்வதால் இணைமுறிவு என்பனவாகும்.

**எலும்பு முறிவின் அறிகுறிகள்**

★ எலும்பு முறிந்த இடத்தில் அல்லது அதற்கருகில் கடுமையான வலி காணப்படல். காயப்படும் இடங்களில் மெல்லியதாக அமுக்கினால் அதிக வலி காணப்படல்.

★ பெரிய வீக்கம் முறிவு ஏற்பட்ட இடத்தில் ஏற்படும்.

★ கண்டிச் சிவந்து காணப்படல்.

★ காயப்பட்ட இடம் அசைக்க முடியாமல் இருத்தல்.

★ உறுப்பு கோணல் போதல், சுருக்கம், தசைநார்கள் முறிந்த எலும்பில் ஏறிச் செல்வதால் அவயவத்தின் நீளம் குறைவாகக் காணப்படல். முறிந்த முறியாத உறுப்புக்களை ஒப்பிட்டுப் பார்த்தல் மூலம் மாற்றம் அவதானிக்கலாம்.

★ எலும்பு ஒழுங்கற்றுக் காணப்படல், தோலுக்கண்மையில் முறிவு காணப்படின் தொட்டுப் பார்த்து உணரமுடியும்.

★ உடைந்த எலும்பு அசைவின்போது உராய்வுச் சத்தம் உணரப்படலாம்.

★ உடைந்த இடத்தில் அசாதாரண அசைவு ஏற்படும்.

★ முறிவு ஏற்பட்ட இடத்தோலில் தொப்பளம் தோன்றலாம்.

**எலும்பு முறிவிற்குரிய சிகிச்சை முன்னுதவி**

★ எலும்பு எவ்விடத்தில் முறிந்ததோ அவ்விடத்தில் கிடைக்கக் கூடிய முதலுதவிப் பொருள்களைக் கொண்டு முறிவிற்கான முன்னுதவி வழங்கப்படல்வேண்டும்.

★ காயப்பட்ட பாகங்களை அசையாது இருக்கச்செய்து அவற்றிற்கு ஆதாரம் வழங்கல் வேண்டும். முறிந்த பாகத்தில் எலும்பு முனைகள், இரத்தக் குழாய்கள், நரம்புகள், தசைநார்கள் சேதப்படாமலும் தோல் கிழிக்கப்படாமலும் பாதுகாத்தலுக்காக ஆதாரப்படுத்தல் அவசியம்.

★ உடைந்த எலும்பை அசைக்கமுடியாமல் பாதுகாத்து கட்டுக்களை கட்டும்போது மூட்டுக்கள் இரண்டு முனைகளிலும் தாண்டும் வரை ஆதாரம் வைத்துக் கட்டுதல் வேண்டும்.

★ முதுகெலும்பு முறிவு, முள்ளந்தண்டுப் பகுதி காயம் ஏற்படும் போது நோயாளிக்கு தொடர்ச்சியான கவனிப்பும் முதலுதவியின் பின் மருத்துவ சிகிச்சைக்கு அனுப்புதலும்..

★ எலும்பு முறிவு, மூட்டு விலகுதல் ஆகிய இரண்டிற்குமான வித்தியாசத்தை கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாகும். எனவே, வைத்தியரிடம் சென்று உதவி நாடுதல். எலும்பு முறிவிற்கான மேற்படி முதலுதவிகளை மேற்கொண்டு போர், அனர்த்தம் காரணமாக ஏற்படக்கூடிய எலும்பு முறிவுக் காயங்களிற்கு அதே இடத்தில் அவசர முதலுதவிகளை மேற்கொள்வதனூடாக தேவையற்ற அவய இழப்புக்களையும் அநியாய உயிரிழப்புக்களையும் தவிர்ப்போம். (203)

## சேவாலங்கா மன்ற கிளை திறப்பு

பரந்தன், ஜூன் 23

சேவாலங்கா மன்றத்தினர் முல்லைத் தீவு மாவட்டத்தில் செயலகம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளனர்.

இச்செயலகத்தின் திறப்பு விழா கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சேவாலங்கா திட்ட முகாமையாளர் காந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'ஜேர்மன் அக்ரோ அக்ஷன்' நிறுவனப் பிரதிநிதி கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

தமது செயற்பாடுகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதியாக இச்செயலகம் திறந்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203 - 352)

## போக்குவரத்து நெருக்கடி

பரந்தன்,ஜூன்-23

விசுவமடுச்சந்தையில் இருந்து தொட்டியடிவரை செல்லும் பிரதான வீதியில் பறிக்கப்பட்டுள்ள கிரவல் மண் பரவப்படாது குவியலாக உள்ளமையால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வீதியைப் புனரமைப்புச் செய்வதற்காகவே கிரவல் பறிக்கப்பட்ட போதும் அதுபரவப்படாது உள்ளதால் சைக்கிள் மற்றும் வாகனங்களில் செல்வோர் நெருக்கடிகளுக்குள்ளாகி வருகின்றனர். எனவே, உரியவர்கள் இது தொடர்பாக கவனமெடுக்கவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர்.

(203-352)

## முல்லையில் நல்லின விதை உற்பத்தி வெற்றிகரமாக நடைபெறுகின்றது

பரந்தன்,ஜூன்23

முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்ட விதை உற்பத்தித் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பலவருடங்களாக விதை பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தினருடன் இணைந்து 2006 சிறுபோகத்தில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் விதை உற்பத்தித் திட்டங்களை பிரதேச நீதியாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் திட்டமே வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாண்டியன்குளம், துணுக்காய், முத்துஐயன்கட்டு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், குமுழமுனை, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் விவசாயப் போதனாசிரியர்களால் தெரிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு விவசாயத்திணைக்களத்தினர் நல்லின விதை பொருள்களை வழங்கி விதை உற்பத்தித்திட்டத்தை ஆரம்பித்துவைத்தனர்.

நெல், சிறுதானியங்களான மரக்கறிப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் போன்ற விதையுற்பத்திப் பயிர்கள் தற்போது விவசாயிகளால் ஆர்வத்துடன் செய்கைபண்ணப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் மூலம் பலகாலமாக இந்த மாவட்டத்தில் நிலவிவந்த நல்லின விதை பொருள்களுக்கான தட்டுப்பாடு நீங்கும் எனவும்-

இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டு வந்த சிரமங்கள் தீருமென்றும் விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை- விவசாயத்திணைக்கள விவசாயப்போதனாசிரியர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியக விவசாயப்பகுதித்திட்ட அலுவலர் உட்படப் பலர் இத்திட்டம் தொடர்பாக விவசாயிகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர். (203-352)

## இயற்கை உரப்பயன்பாட்டால் சூழல் மாசடைவது தடுக்கப்படும்

### பொருண்மியம் விவசாயிகளுக்கு அறிவுறுத்து

பரந்தன், ஜூன்23

பயிர் உற்பத்தியாளர்கள் கூட்டெருக்குழிகளை அமைத்து கூட்டெரு தயாரித்து உற்பத்திப் பயிர்களுக்கு அவற்றை பசளையாக இட வேண்டும்.

விவசாயத் திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் இணைந்து பயிர் உற்பத்தியாளர்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

தற்போது செயற்கை உரத்திற்கு அதிகவிலை ஏற்றம் காணப்படுவதையும் செயற்கை உரத்தை அதிகமாகப் பயன்படுத்துவதால் நிலத்தின் வளம் குன்றிப் போவதையும் கருத்தில் கொண்டு இவர்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். செயற்கை உரத்தால் வீண் செலவு, சூழல் மாசுபடல் பேன்றனவும் ஏற்படுகின்றது. பயிர் உற்பத்தியாளர்கள் கழிவுப் பொருள்களை ஒன்றுசேர்த்துக் கூட்டெருவைத் தயாரித்து அதனுடன் ஓரளவு இரசாயன உரமும் கலந்து பயிருக்கு இடலாம்.

அவ்வாறு உரப்பாவனை செய்யும்போது மண்ணின் வளம் பாதுகாக்கப்படுவதுடன் பயிர் வளர்ச்சியும் சிறப்பாக நடைபெற்று தரமான விளைச்சலை நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே, அனைவரும் வீட்டுக்கொரு கூட்டெருக்குழி அமைத்துத் தமது தேவைகளுக்கேற்ப பசளையைத் தயாரித்துப் பயிர்களுக்கு இடவேண்டும். இதன் மூலம் ஆரோக்கியமாக வாழமுடியும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (203-352)

## கட்டுமானத் தொழிலாளர்கள் அனைவரும் 10ஆம் திகதிக்கு முன் பதிவுசெய்யவேண்டும்

### கட்டுமானப் பொறியியல் செயலகத்தினர் அறிவிப்பு

பரந்தன்,ஜூலை23

தாயகப் பகுதிகளில் கட்டுமானத் தொழிலில் ஈடுபடும் அனைத்துத் தொழிலாளர்களையும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யவேண்டும் என்று தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகத்தினர் கேட்டுள்ளனர்.

ஏற்கனவே தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகத்தினரால் இவர்களைப் பதிவு செய்வதற்கான கால அட்டவணை பிரதேச ரீதியாக வழங்கப்பட்டிருந்தது.

இக்காலப்பகுதியில் பதிவுகளை மேற்கொள்ளாத கட்டுமானத் தொழிலாளர்களையே எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

எனவே, உரியவர்கள் இதனைக் கருத்திற் கொண்டு கிராம சேவையாளர் ஊடாக அல்லது மனிதவள அலுவலர் ஊடாகப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -

பதிவுகளை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் தொழில்வழங்குநர்களால் ஏற்படும் இடையூறுகளுக்கு யாரும் பொறுப்பாகமாட்டார்கள் எனவும் தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

(203-405-352)

## செல்வபுரம், அளம்பில் பகுதிகளில் 70 நிரந்தர வீடுகள் கையளிப்பு

கிளிநொச்சி,ஜூன்23

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 70 வீடுகள் கடந்த மாதம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலையின் பின்னரான மீள்கட்டுமானப் பணியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 706 நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் பொறுப்பேற்றிருந்தது.

இதில் தற்போது செல்வபுரத்தில் 30 வீடுகளும் அளம்பில் வடக்கில் 40 நிரந்தர வீடுகளும் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கியூடெக் - கரித்தாஸ் இணை இயக்குநர் அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் தலைமையில் கடந்த மாதம் செல்வபுரம், அளம்பில் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், திட்டமிடல் மேம்பாட்டுச் செயலக செயலாளர், பங்குத்தந்தையர்கள், கியூடெக் - கரித்தாஸ் திட்ட முகாமையாளர் சியூட், திருமதி சியூட், உதவித் திட்ட இணைப்பாளர் செட்றிக், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர், கிராம அலுவலர்கள் உட்படப் பெரும்பாலானோர் கலந்துகொண்டனர்.

ஏனைய 636 வீடுகளுக்குமான வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

(203)






அளம்பில், செல்வபுரம் ஆகிய இடங்களில் கையளிக்கப்பட்ட வீடுகளின் மாதிரி வீடு ஒன்றையும் பயனாளி ஒருவருக்கு கியூடெக் - கரித்தாஸ் திட்ட இணைப்பாளர் சுஜோட் வீட்டுக்கான திறப்பை கையளிப்பதையும் படங்களில் காணலாம். (203)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

### ஆலய பொதுக்கூட்டம்

வட்டக்கச்சி, ஜூன்23

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்தமாதம் நடைபெறவுள்ளது.

எனவே, ஆண்டு சந்தா அங்கத்தவர்கள் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பிக்குமாறும் அயுட்கால அங்கத்தவர்கள் ஆலய நிர்வாகச் செயலாளருடன் தொடர்பு கொண்டு தங்கள் அங்கத்துவத்தை பரிசீலிக்குமாறும் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

(203-405)

### நிர்வாகம் தெரிவு

வட்டக்கச்சி,ஜூன்-23

கனகபுரம் ஸ்ரீ காந்த சனசமூக நிலையத்திற்கு புதிய நிர்வாகக் குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த எஸ்.மகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழு தெரிவில் தலைவராக மா.சோதிநாதனும் செயலாளராக மு.சிவநாதனும் பொருளாளராக சு.சிவதாசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(203-405)

### பயிற்சி நெறிகளுக்கான நேர்முகத் தேர்வு இன்று

வட்டக்கச்சி,ஜூன் 23

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 'நெற்ப்' நிறுவன நிதியுதவியுடன் 'ஜீடோ' நிறுவனத்தால் நடத்தப்படவுள்ள மேசன், தச்சு வேலைகளுக்கு பயிற்சி வழங்குவதற்கென தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களும், ஆர்வமுள்ளவர்களும் இந்நேர்முகத் தேர்விற்குரிய ஆவணங்களுடன் வருகைதரலாம் என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.(203-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவான்டனாமோ சிறைமூடப்படும்:

# கைதிகள் தம் ஊர்களுக்குச் செல்வர்

## வியன்னாவில் அதிபர் புஷ் அறிவிப்பு

குவான்டனாமோ அமெரிக்க சிறையை மூடிவிட விரும்புவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியுள்ளார்.

குவான்டனாமோ சிறையை மூடிவிட்டு அங்குள்ள கைதிகளில் பலரை அவர்களின் ஊர்களுக்குஅனுப்பிவிட விரும்புவதாகவும் கூறினார். ஆனால், எல்லாக் கைதிகளையும் அனுப்பிவிடமுடியாது. அவர்களில் சிலர் அமெரிக்காவிலேயே விசாரணைக்குட்படுத் தப்பட வேண்டியவர்கள். அவர்கள் இரத்தம் தோய்ந்த கொலைகாரர்கள் என்று புஷ் கூறினார்.

வியன்னாவில் நடைபெற்ற ஒருநாள் உச்சிமாநாட்டையடுத்து அமெரிக்க அதிபரின் இக்கருத்து வெளியாகியுள்ளது. பின்னர் புஷ் ஹங்கேரிக்குப் புறப்பட்டுச் சென்றார். குவான்டனாமோ சிறைக்கைதிகள் கொடுமைப்படுத்தப்படுவது தொடர்பாக அமெரிக்காவுக்குக் கடும் எதிர்ப்பு வளர்ந்து வந்துள்ளது.

அமெரிக்க அதிபர் குவான்டனாமோ சிறை தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் கொண்டுள்ள கவலையைத் தாம் உணர்வதாகக் கூறினார். அதனை மூடிவிடவே விரும்புகி றேன். ஆனால் சில கைதிகள் அமெரிக்க நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களை வீதியில் விட்டால் எவரையும் கொன்றுவிடக் கூடியவர்கள் என்று கூறினார். (ப)




## பயங்கரவாதத்திற்கு எதிரான போரிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்

### அமெரிக்க அதிபர் உறுதிமொழி

வியன்னா,ஜூன்23

பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் போதும் மனித உரிமைகள் காக்கப்படும் என்ற உறுதிமொழியை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அளித்திருக்கிறார்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளும் அமெரிக்காவும் கலந்துகொண்ட உச்சிமாநாடு தொடர்பாக இந்த உறுதிமொழி தயாரிக்கப் பட்டிருந்தது.

குவான்டனாமோ சிறையில் ஈராக் போர்க் கைதிகளை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படை வீரர்கள் சித்திரவதை செய்வதைக் கண்டித்து உலகின் பல்வேறு தரப்பிலிருந்தும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. ஐரோப்பிய நாடுகளும் இச்செயல்களைக் கண்டித்தன. இதை மனதில் வைத்தே அமெரிக்க அதிபர் இந்த உறுதிமொழியில் கையெழுத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

குவன்டனாமோ குறித்து இரு தரப்பு கூட்டறிக்கையில் ஏதும் குறிப்பிடாவிட்டாலும் சட்டம் எங்கு அமுலாவதில்லையோ அந்தமாதிரியான பகுதிகளுக்கு நம்முடைய நாடுகளில் இடமே இல்லை என்று ஜோர்ஜ் புஷ்ஷை கடந்த செவ்வாய்க்கிழமை வரவேற்ற ஆஸ்திரேலிய பிரதமர் உல்ஃப்காங் செஷல் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (202)

## இந்தோனேஷியாவில் நிலச்சரிவு; 87 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

இந்தோனேஷியா,ஜூன்23

இந்தோனேஷியாவின் சுலவேசி மாகாணத்தில் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளத்திற்கு நேற்றுவரை 87 பேர் பலியாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் சுலவேசி மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரண்டு நாள்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவினால் ஏராளமானவர்கள் மண்ணில் புதையுண்டு இறந்தனர்.



பாதை சரியில்லாததால் இராணுவம், பொலீஸ் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு நடந்தே வந்துசேர்ந்தனர். இதையடுத்து, புதையுண்டவர்களைத் தேடி மண்ணை அப்புறப்படுத்தும் பணி தொடர்ந்து துரித கதியில் நடந்துவருகிறது. இதுவரை 87 சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன. இன்னும் 12 பேரைக் காணவில்லை.

இதில் சின்ஜாய் ரீஜென்சிதான் மிகவும் மோசமாகப்பாதிக்கப்பட்ட பகுதி. இங்குதான் அதிகபட்சமாக 77 சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன. மக்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தும்படி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் சமூக நலத்துறை அமைச்சர் பச்டியர் செம்சா தெரிவித்தார். (202)



கவுபாத்தியில் அம்புகாசிமேளா என்னும் திருவிழாவின்போது ஒரு சாது தலையைப் பூமிக்குள் புதைத்துக்கொண்டு பக்தர்களிடம் பணம் கேட்கும் காட்சியைப் படத்தில் காணலாம்.

## எரிபொருள் வாகனம் தகர்ப்பு; ஒன்பது வாகனச் சாரதிகள் பலி!

ஜலாலாபாத்,ஜூன்23

ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்க இராணுவத்திற்கு விநியோகிப்பதற்காகப் பாகிஸ்தானிலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற டாங்கர் லொறி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானிலிருந்து எரிபொருள் நிரப்பிய டாங்கர் லொறிகள் டோர்காம் எல்லை வழியாகக் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆப்கானிஸ்தானுக்குள் சென்றன. சிறிது நேரத்தில் முதல் லொறியில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் அந்த டாங்கர் தீ பற்றி எரிந்தது. அந்தத் தீ பின்னால் வந்த 9 டாங்கர்களுக்குப் பரவியது. இதில் 6 சாரதிகள் தீயில் கருகி இறந்தனர்.

முன்னதாக அமெரிக்கப் படைகளுக்கு உதவி செய்யும் ஆப்கானிஸ்தானியர்கள் கொல்லப்படுவார்கள் என்று தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். (202)

## சத்துணவில் அழுகிய முட்டை 288 மாணவர்கள் பாதிப்பு

### தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சம்பவம்

தமிழ்நாட்டின் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் கடந்த புதன்கிழமை மதியம் சத்துணவுடன் அழுகிய முட்டைகளை உட்கொண்டதால் 288 மாணவ, மாணவியர் வாந்தி, மயக்கம் மற்றும் வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை அருகே சேப்பாப்பட்டுக் கிராம நடுநிலைப்பள்ளியில் உணவுடன் முட்டை தரப்பட்டது. முட்டை சாப்பிட்ட மாணவர்கள் சிலருக்கு வயிற்றுவலி ஏற்பட்டுப் பின்னர் சிலருக்கு வயிற்றுப்போக்கு உண்டானது. உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மாணவ, மாணவிகளுக்கு உடனடி சிகிச்சை அளித்தனர்.

ஆரணி அருகே உள்ள வேலப்பாடி நடுநிலைப்பள்ளியில் சத்துணவுடன் அழுகிய முட்டைகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கியதால் அனைவருக்கும் வாந்தி, மயக்கம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றனர்.

மாணவர்கள் 49பேரும் மாணவிகள் 66 பேரும் பெற்றோர் 2 பேருமாக மொத்தம் 117 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

குடியாத்தம் அருகே சத்துணவு சாப்பிட்ட 96 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. இவர்கள் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (202)

## பேரழிவு அணு ஆயுதங்கள் அழிப்பு அமெரிக்கா - ரஷ்ய ஒப்பந்தம் நீடிப்பு

வாஷிங்ரன்,ஜூன்23

முன்னாள் சோவியத் யூனியன் வசமிருந்து வந்த பேரழிவு அணு ஆயுதங்களை அழிப்பது தொடர்பாக அமெரிக்காவுடன் ரஷ்யா செய்துகொண்ட ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அதிபர் மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

பேரழிவு ஆயுதங்களை அழிப்பதற்கான செலவை அமெரிக்காவே ஏற்க வகை செய்கிறது இந்த ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் மேலும் 7 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

1992இல் புஷ் அதிபராக இருந்தபோது இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. அதன் பிறகு 1999இல் நீடிக்கப்பட்டது. பேரழிவு தரத்தக்க ஆயுதங்கள் மூலம் ஏற்படக்கூடிய அபாயத்தை ஒத்துழைப்பு அடிப்படையில் குறைத்துக் கொள்வதும் இந்த ஒப்பந்தத்தின் நோக்கம்.

பேரழிவு ஆயுதங்கள் தீவிரவாதிகள் வசம் போய்ச் சேரக்கூடிய அபாயம் உள்ளது. எனவே, இந்த ஆயுதங்களைச் செயலிழக்க வைக்கவும், அழிக்கவும் இந்த உடன்பாடு வகை செய்கின்றது. ஏவுகணைகள், அணுகுண்டுகள் என ஆயிரக்கணக்கில் பேரழிவு தரத்தக்க ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யாவில் இந்த ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ள முகாம்களை சுற்றிப் பாதுகாப்பை மேம்படுத்தவும் தீவிரப்படுத்தவும் இந்த உடன்பாடு வகை செய்கிறது. மேலும் கஜகஸ்தான், பெலாரஸ், உக்ரைன் ஆகிய இடங்கள் அணு ஆயுதம் இல்லாத பகுதிகளாக மாறவும் வழிசெய்துள்ளது இந்த உடன்பாடு என்று அதிபர் மாளிகை செய்தித் தொடர்பாளர் டோனி ஸ்னோ கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார். (202)

## சட்டத்தரணி கொலையை எதிர்த்து சதாமும் சகாக்களும் உண்ணாவிரதம்

பக்தாத்,ஜூன்23

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் தமது தரப்பிலான சிரேஷ்ட சட்டத்தரணி கொல்லப்பட்டதை எதிர்த்து உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

சதாம் ஹுசைனின் சட்டத்தரணி காமிஸ் ஆல்-ஓபீதி தமது வீட்டிருந்து கடத்திச் செல்லப்பட்ட சில மணிநேரத்தின்பின் தலைநகரில் ஓரிடத்தில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சதாம் ஹுசைனும் அவருடன் ஏழு எதிரிகளும் தமது சட்டத்தரணிகளுக்குச் சர்வதேச பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்துள்ளனர். இந்த எட்டுப் பேரும் மனித இனத்துக்கெதிராகக் குற்றம் புரிந்துள்ளார்கள் என்ற வகையில் நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை - அரச தரப்பு சட்டத்தரணிகள் சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

இவ்வழக்கு ஆரம்பமான காலப் பகுதியில் கடந்த வருடம் எதிர்த்தரப்புச் சட்டத்தரணிகள் இருவர் கொல்லப்பட்டிருந்தனர். இவ்வழக்கு அடுத்த மாதம் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ப)

## மூவாயிரம் ஆண்டுகள் பழைமையான கல்லறைகள் சீனாவில் கண்டுபிடிப்பு

பெய்ஜிங்,ஜூன்23

சீனாவில் 3 ஆயிரம் ஆண்டு பழைமை வாய்ந்த கல்லறைகள் (பிரமிட்டுகள்) கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சீனாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஜிலிங் மாகாணத்தில் இந்த 8 கல்லறைகளும் கண்டுபிடிக்கப்பட்டதாக அங்குள்ள செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

மலைப்பகுதியில் அமைந்திருந்த இந்தக் கல்லறைகள் வெள்ளத்தினால் ஏற்பட்ட மலை அரிப்புக் காரணமாக வெளிப்பட்டன. இந்தப் பிரமிட் வடிவக் கல்லறைகள் 50 மீற்றர் உயரமும் 30 மீற்றர் அகலமும் கொண்ட சதுர அடித்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இது ஏறக்குறைய ஒரு கூடைப்பந்து மைதானத்தின் அளவாகும். மலையிலிருந்து தோண்டப்பட்ட மண் மற்றும் கல்லைக் கொண்டு அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளன.

மூன்று அடுக்காகக் கட்டப்பட்டுள்ள ஒரு கல்லறையின்மேல் தளத்தில் கல்லாலான சவப்பெட்டி வைக்கப்பட்டுள்ளது. இது பண்டைய பழங்குடி அரசரின் சவப்பெட்டியாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்தக் கண்டுபிடிப்பு பழங்கால சீன நாகரிகத்தை நுட்பமாக அறிந்துகொள்ள உதவும் என்பதில் சந்தேகமில்லை. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தையல் கடை வாடகைக்கு

K.K.S. வீதி, தாவடி கொக்குவிலில் கடந்த 12 வருடங்களாக இயங்கும் இத் தொழில் ஸ்தாபனம் வாடகைக்குண்டு. இங்கு தையல் மெசின் (யூக்கி, டபிள்சிங்கர் CD க்கள், கொம்பியூட்டர், துணிப்பீஸ் மற்றும் கண்ணாடிப் பிற்றிங் செய்த குளிரூட்டப்பட்ட (A/C) வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தொடர்பு: T.P.:021 222 3092. (51446)

## வீடு வாடகைக்கு

யாழ்.இந்து மற்றும் இந்து மகளிர் கல்லூரிக்கு சமீபமாக சிவகுருநாதர் ஒழுங்கை, அரசடி வீதி, நீராவியடியில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு (மாடிப்பிரிவு) வாடகைக்குண்டு (சைவபோசனத்தார் விரும்பத்தக்கது) அவ்வீட்டுத் தளபாடங்கள், சாதனங்கள் என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 2223171 (51474)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய பகிரா புறொயிலர் குஞ்சுகள் 24-06-2006 மாலை விநியோகிக்கப்படும். றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை, தாரகை 1ஆம் கட்டை பருத்தித்துறை, P.ரவி, சாவகச்சேரி, நாகம்ஸ்பாம் வட்டுக்கோட்டை, மதுரா 227 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், றாஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம் மாதகல் வீதி, பண்டைத்தரிப்பு, றாஜ் ஸ்ரோர் நெல்லியடி பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். T.P.: 222 2867 (51513)

## தவறிவிட்டது

16/1 மவுண்கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றெஜினோல்ட் லொயிட் ஜான்சிராணி என்பவரது தேசிய அடையாள அட்டை (718155029V ) 20-06-2006 செவ்வாய்க்கிழமை யாழ். நகரப்பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (51473)

இராஜகோபால் யோகேஸ்வரனின் தேசிய அ.அட்டை (551381277X), விசேட அ. அட்டை, மோட்டார்சைக்கிள் அனுமதிப்பத்திரம் (இல.1665044), சாரதி அனுமதிப்பத்திரம், கடைக்குரிய பேரேடு, காசேடு என்பன 19-06-2006 அன்று கன்னாதிட்டி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.08, ஆறுமுகம் ஒழுங்கை, 3ஆம் கட்டை, கல்வியங்காடு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (51509)

## சிறுவிளம்பரம்

நீர்வள சூழலியல் பாதுகாப்பு முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரித்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுவர்களில் சுவரோவியங்களை வர்ணப்பூச்சினால் (paint) வரைவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுவரோவியங்களை வரைவதில் தேர்ச்சி உள்ளவர்கள் இவ் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும். (சி/49793)

தொ.பே.:0212226752 கச்சேரி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

14.06.2006 அன்று ஓமந்தை – முகமாலைச் சோதனைச் சாவடிகளுக்கு இடையில் நீலநிற Swiss Polo சூட்கேஸ் ஒன்று தவறி விட்டது. இதில் மணப்பெண்ணின் கூறையும் அடங்கியுள்ளதால் கண்டெடுத்தவர்கள். கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே.:0776062406, 0776062269

**செ.சின்னராசா, நாச்சிமார் கோயில் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.**

## உடையமைத்தல் பயிற்சிநெறி ஆரம்பம்

தென்மராட்சி,ஜூன்23

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் வரணி மகாவித்தியாலயத்தில் உடையமைத்தல் பயிற்சிநெறி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறியில் 20 பேர் பங்குபற்றி பயின்று வருவதாக வித்தியாலய அதிபர் செ.சுப்பிரமணியம் தெரிவித்தார். (117)

## தலைமை அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

வலி.கிழக்குப் பிரதேச சபை தலைமை அலுவலகம் பருத்தித்துறை வீதி, புத்தூரில் இயங்கி வருவதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்தச் சபையின் தலைமை அலுவலகம் முன்னர் நீர்வேலியில் இயங்கிவந்தது. கடந்த 15ஆம் திகதி முதல் புத்தூரில் இயங்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (204)

## சேவை நலன் பாராட்டு

எமது ஆலய குரு

**வி.சிவம் ஐயா** (மட்டுவில்)

அவர்கள் கடந்த 11-05-2006இல் குருப்பட்டாபிஷேகம் பெற்றதை முன்னிட்டும், 2006 வைகாசி மாதம் வருடாந்த உற்சவத்தின் போது அவர் ஆற்றிய பக்தி உணர்வு மிக்க அபிஷேக அலங்கார ஆராதனை, சமய, சமூக சேவைகளைப் பாராட்டும் முகமாகவும் "சமூகஜோதி, அபிஷேக அலங்காரவிற்பன்ன அர்ச்சகதிலகம்" என்னும் சிறப்புப் பட்டத்தினை வழங்கி நாங்களும் இவ்வூர்மக்களும் பெருமகிழ்வு அடைகிறோம்.

**ஆலய பரிபாலன சபை,**
**சப்த கன்னிமார் தேவஸ்தானம், நீர்வேலி.**

(சி/49795) (26.15.45)

**காரைநகர் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்) திருப்பணிச்சபை.**

## பொதுக் கூட்ட அறிவித்தல்

*தலைவர்:-* திரு.K.K நடராசா
*காலம்:-* 02-07-2006 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணி
*இடம்:-* ஆலய வசந்த மண்டபம்

சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

| | | |
|---|---|---|
| K.K.நடராசா | ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம் | க.பாலசுப்பிரமணியம் |
| தலைவர் | ஆதீனகர்த்தாக்கள் | செயலாளர் |

(51449)(26.45.15)

## பெயர் மாற்றம்

*ப.வீரசிங்கம் வீதி, கச்சாய்றோட், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த* **ஆறுமுகம் பேரழகி, ஆறுமுகம் ரமணி, ஆறுமுகம் ஈழரேகா** *ஆகிய நாம் 22-06-2006 முதல் எமது பெயரை முறையே* **ஆறுமுகம் சோபியா, ஆறுமுகம் சோபிகா ஆறுமுகம் பிரவீணா** *என சட்டவரம்புக்கமைய பெயர்மாற்றம் செய்துள்ளோம் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.*

**ஆறுமுகம் சோபியா,**
**ஆறுமுகம் சோபிகா,**
**ஆறுமுகம் பிரவீணா.**

(51515)(26.15.45)

## கண்ணீர் அஞ்சலி

மாதகல் நுணசை வித்தியாலய ஆசிரியை திருமதி C.D.A. *பேர்னாண்டோ* அவர்களின் அன்புத்தாய்

**இராயப்பு மேரி மாகிரேற்**

அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இணைந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/மாதகல் நுணசை வித்தியாலயம், யா/ மாதகல் சென்.யோசப் மகாவித்தியாலயம்.**

(51507) (26

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தரம் -11 2005 க.பொ.த.(சா.த.)தரம்**

| | |
|---|---|
| செல்வி ச.தமிழினி | - 5 A, 3B , 2C |
| செல்வி ச.காருண்யா | - 3A , 1B , 5C, 1S |
| செல்வி த.லதீசா | - 2A , 3B ,4C, 1S |
| செல்வன் க.நிசந்தன் | - 1A , 5C, 3S |
| செல்வன் க.றஜந்தன் | - 1A, 4C, 2S |

***தரம் - 5 2005 புலமைப்பரிசில்***

செல்வி இ.சுஜீபா 136 புள்ளிகள்

இம் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் சிறப்பாக வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/மயிலணி சைவமகாவித்தியாலயம், *பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,* சுன்னாகம். (51511)(26.15.45)


## மருத்துவத்துறை பட்டம் உடனடி அனுமதி

Vitebsk
State Medical University

இலங்கை மருத்துவ சபை
உலகசுகாதார ஸ்தாபனம்
ஜி.எம்.சி. அங்கீகாரம் பெற்றது.



**பேராசிரியர் வை.அலெக்சீன்கோ M.D., Ph.D.**
வெளிநாட்டு மாணவர் அனுமதிப் பிரிவுத் தலைவர் மற்றும் நரம்பியல், நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவுத் தலைவர்

தற்பொழுது இலங்கையில் இருக்கிறார்.

**மருத்துவத்துறை கலாநிதி எம்.டி.**
**ஆங்கில மொழி மூலம்**
*பெறுபேறு எதிர்பார்ப்போரும் விண்ணப்பிக்கலாம்.*
**உடன் அனுமதி வலை அமைப்பு**

**கொழும்பு** PATHE கல்வி நிறுவனம்- 25 ஜூன் மு.ப. 9
**கண்டி** - ஹோட்டல் சுவிஸ்ஸி - ஜூன் 29 மு.ப. 9.30
**மட்டக்களப்பு** - சுபாராஜ் உணவகம் - ஜூன் 30 மு.ப. 4.30

கருத்தரங்கையடுத்து உடன் அனுமதி தொடரும்.
உடன் அனுமதி தொடர்பான நேர்காணல்களுக்கும் மேலதிக தகவல்களுக்கும் தொடர்புகொள்க. 0773017883

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane, Colombo 03. 2502012, 5377752 , 2591271


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna College Institute of Technology
Vaddukoddai

**Radio, TV and Electronic Servicing Practice**

காலம்: 6 மாதங்கள் (முழு நேரம்)

முழு அளவிலான செயல்முறைப் பயிற்சிநெறி
(Full time Practical Oriented Course)

**கல்வித்தகைமை :-** G.C.E.O/L வரை படித்த மாணவர்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

**விசேட பயிற்சி:-** UPS, Computer Power supply, monitor, CD Player, DVD பழுது பார்த்தல்

Apply before: 28th June 2006

*மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-*

**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai**

(சி/49788)(26.15.45)


T.Phone : 0602213139 / 0212228275 Email:jcit@sltnet.lk

## வீடியோ கலாமினியின் நன்றிகள் பல

தங்கள் பணத்தில் எங்கள் கடின உழைப்பாலும் எல்லோரது நல்வாழ்த்துக்களாலும் உருவாக்கப்பட்ட முற்றிலும் குளிரூட்டப்பட்ட

**இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்**

(121 அடி நீளம் 52 அடி அகலம்)



இவ்வளவு பெரியளவில் யாழ். மண்ணுக்கே பெருமை சேர்க்கும் வண்ணம் அமைந்துள்ளது. இப் பெருமையெல்லாம் அச்சுவேலிக்கே உரியது. இராஜமாணிக்கம் கல்யாண மண்டப நிர்மாணப் பணிக்கு பண உதவி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கிய அன்பு நெஞ் சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக,

திரு.இ.தங்கவேல் (சொக்கன்) 'நுண்கலைக்கோ' பத்தமேனி, அச்சுவேலி - ஆசாரி வேலை (தச்சுவேலை)
திரு.கி.தவேந்திரராசா (தவம்) நாவலம்பதி, அச்சுவேலி - (மேசன்வேலை)
திரு.க.பவீந்திரன் - அச்சுவேலி வடக்கு (மேசன்வேலை)
திரு.ஞா.அன்ரனி அருள்தாஸ் (அன்ரன்) அச்சுவேலி.(மாபிள் இணைப்பு - மதில் வேலை)
திரு. S.ஸ்ரீதரன்-ஸ்ரீஇரும்புத் தொழிலகம்-மல்லாகம் (இரும்பு வேலை)
திரு.சி.கிரிதரன் (கிரி) நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம் (சிற்ப வர்ணப் பூச்சுவேலை)
திரு.மா.செல்வநாயகம் - அரசடி நல்லூர் - (பெயின்றிங் வர்ணப்பூச்சுவேலை)
திரு.புருசோத்தமன் - பூம்புகார் (இந்தியா - சிற்பவேலை)
திரு.இ.யோகானந்தன் (கிருபா) வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (அலுமினிய இணைப்பு வேலை)
திரு.A.நிஷாந்தன் - நீர்வேலி (கூல் ஏயர்ஸ்) குளிரூட்டி பொருத்துதல்
திரு.பே.ஞானப்பிரகாசம் - அச்சுவேலி வடக்கு - நீர்விநியோகக் குழாய் பொருத்துதல்-- தாட்சாயினி எலக்ரிக்கல் - அச்சுவேலி
திரு.ச.கைலாசபிள்ளை (நவம்) நியூகமல் சோமிக்ஸ் - யாழ்ப்பாணம் (அழகுவர்ண நில மாபிள்கள் தந்துதவியவர்)
திரு.எஸ்.நாகராசா - மின் அத்தியட்சகர்- மின்சாரசபை, சுன்னாகம் (மின்இணைப்புப் பிரிவு)
பிரதேச முகாமையாளர் திரு.A.T.A. தேவராசா அவர்கள் இலங்கை வங்கி

விசித்ரா விஷன் - யாழ்ப்பாணம், கல்யாணி பான்சி - யாழ்ப்பாணம், சுந்தர்ஷன் மானிப்பாய், விமாகி - யாழ்ப்பாணம், ஸ்ரீமுருகன் இரும்பகம் - அச்சவேலி, சந்நிதி வேலன் -அச்சுவேலி, கணேசா புடைவையகம் - யாழ்ப்பாணம், பேஷன் கவுஸ் - யாழ்ப்பாணம் மற்றும் பிரான்ஸில் இருக்கும் மைத்துனன் புஸ்பராசா, தங்கை புஸ்பலதா குடும்பம், அண்ணன் S.M.T. குடும்பம், சகோதரிகள், நோர்வே நாட்டில் உள்ள சகோதரர்கள், கனடாவிலுள்ள விஜயராஞ்சன், நண்பன் சாள்ஸ், மணற்காட்டிலுள்ள அரியதுரை குடும்பத்தினரும், சகோதர சகோதரிகளுக்கும், அச்சுவேலிப் பகுதி வாழ் நண்பர்களும் பணஉதவி வழங்கி மண்டபத்தை நிர்மாணிக்க உதவிய அனைவருக்கும் நன்றிகள் பல.

எமது பணிகளுக்குத் தேவையான நிதியுதவி செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (சி/49759)(26.15.45)

**வீடியோ கலாமினி - அச்சுவேலி**
**T.P.: 077 3053080**

## மரண அறிவித்தல்

### *கணபதியார் தங்கராசா*

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

கலைநகர், வட்டு -வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதியார் தங்கராசா 21-06-2006 அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதியார்- சீதாதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வைரமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாரதாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை, அமரசிங்கம், பாக்கியம், அன்னலட்சுமி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனபாக்கியலட்சுமி (கொழும்பு), நித்தியானந்தம் (கொழும்பு), சச்சிதா[illegible]ந்தம் (ஆஸ்திரேலியா), தயானந்தம் (கிளிநொச்சி), து[illegible]மணி, திலகராணி, முருகானந்தம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகரத்தினம் (கொழும்பு), இன்பவல்லி (கொழும்பு), நந்தினி (ஆஸ்திரேலியா), செல்வக்குணவதி அம்மா (கிளிநொச்சி), கருணானந்தசிவம் (ஓய்வு பெற்ற கணக்குப் பதிவாளர்), மோகனநாதன் (அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி), தவலோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22-06-2006) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலைநகர், வட்டு -வடக்கு, சித்தன்கேணி.**
தொ.பே.077 6230747

*தகவல்:*
**த.நித்தியானந்தம், த.தயானந்தம்** (மகன்மார்)

(சி/49791)(26.15.45)

# 20ஆயிரம் சுகாதார ஊழியர் சம்பள உயர்வு பெறுவார்கள்

கொழும்பு,ஜூன்23

சுகாதாரத்துறையில் பணியாற்றும் சுமார் 20 ஆயிரம் ஊழியர்கள் சம்பள உயர்வு பெறவிருக்கிறார்கள். வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து இந்தச் சம்பள உயர்வு அமுலுக்கு வரும் என்று தெரிகின்றது.

சுகாதாரத்துறை பணியாளர்கள் தொடர்பான 2006ஆம் ஆண்டு இலக்கம் 09சுற்றறிக்கைக்கு அமைவாக சம்பள உயர்வு நிர்ணயிக்கப்படவிருப்பதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இத்துறையிலுள்ள 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தாதிமார்களும் தமது சம்பள நிலுவைகளையும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளையும் பெறுவார்கள் என்று தெரிகின்றது.

சுகாதாரத்துறை ஊழியர்களின் சகலவித கொடுப்பனவுகளையும் கொடுத்து முடிக்கும்படி அமைச்சர் சிறிபால டி சில்வா உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கொடாகொட குழுவின் சிபாரிசுகளுக்கிணங்க மூன்றாம் மற்றும் இறுதித் தவணை சம்பள நிலுவைகளையும் விரைவில் வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

(ப)






## 51 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 29-11-1921 — மறைவு 24-05-2006

**அமரர் கந்தையா இராமநாதன் (J.P)**

**எம் தலைவரை இழந்து தவித்திருந்தவேளை கைகொடுத்த இதயங்கள், செய்திகள், பத்திரிகை அறிவித்தல்கள், மலர் வளையங்கள் என எம்முடன் தாங்கொணா துயர்தனை பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.**

25.06.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

45/23A, பிறற்றிக்கா றோட்,
வெள்ளவத்தை. தொ.இல.: 2589409

# மனித உரிமை அலுவலர்கள் காங்கேசன்துறை விஜயம்

கொடிகாமம் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்ட குடும்பஸ்தரை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் கடந்த செவ்வாய்க்கிழமை சென்று பார்வையிட்டனர்.

கொடிகாமம் காளி கோயில் வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சுப்பிரமணியம் மயூரன் (வயது 23) என்பவரே இவ்வாறு கடந்த 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மனித உரிமைகள் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி மு.றெமீடியஸ், புலன் விசாரணை அதிகாரி மொறின் நிஷாந்தினி ஆகியோரும் மேற்படி குடும்பஸ்தரை நேரில் பார்வையிட்டனர். (190)

# சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் கிராம மட்டத்தில் உருவாக்கம்

சிறுவர் பாதுகாப்பு மையத்தினால் கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக சாவகச்சேரிப் பிரதேசத்தில் மட்டுவில், சந்திரபுரம், சரசாலை ஆகிய கிராமங்களும் கரவெட்டிப் பிரதேசத்தில் ராஜகிராமமும் யாழ். நகரத்தில் குருநகர் கிராமமும் அடங்கலாக ஐந்து கிராமங்களிலுமே மேற்படி குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்களின் மூலம் சிறுவர் தொடர்பான ஆய்வுகள், வருமான ஊக்குவிப்பு, சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் அமைத்தல், பொழுதுபோக்கு வசதிகள், திடீர் அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தல் உள்ளிட்ட பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (204-ரி)

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையில் ஆயுள்வேத தாதிமார்/மருந்தாளர் பதவிகளுக்கு பயிலுநராக ஆட்சேர்ப்பு செய்தல் - 2006

**17.06.2006 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தின் பந்தி 3 பிரிவு 'இ' கீழ்வருமாறு திருத்தப்படுகின்றது.**

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக வாக்காளர் இடாப்பு பிரித்தெடுப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கவேண்டும்.**

**வே.பொ.பாலசிங்கம்**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
திருகோணமலை. (சி-49798)(21-32-14-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கந்தசாமி தயாளசுந்தரம்**
(தயாளன்)

உதயம் 06-07-1949 — அஸ்தமனம் 05-07-2005

திதி: அபரபக்க சதுர்த்தசி, 24.06.2006

எமது குடும்பத் தலைவரே!
அன்பின் சிகரமே!
எமை ஆதரித்த பாசமிகு தெய்வமே!
உமை நாம் என்றும் மறப்போமா?
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நாளை (24.06.2006) சனிக்கிழமை நடைபெறவிருக்கும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வைரவர் கோயிலடி,*
*தெணி ஒழுங்கை,* (51452)
*வல்வெட்டித்துறை.* (32-14-11)

*பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 'ஷப்றா' வில் வைப்பீடு செய்தவர்களுக்கு இறுதிக்கொடுப்பனவு

கொழும்பு,ஜூன்23

'ஷப்றா' நிதி நிறுவனத்தில் வைப்பீடு செய்தவர்களுக்கு இறுதிக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இதுவரை கொடுப்பனவு பெறாதவர்கள் தங்கள் முதலீட்டுப் பத்திரத்தைச் சுய முகவரியிடப்பட்ட தேவையான பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொண்டு கொடுப்பனவைப் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 'ஷப்றா' யூனிபோ பினான்ஸ் லிமிட்டட், 29/1, பொல் கென்கொட காடின், கொழும்பு 05' என்பதே அந்த முகவரி ஆகும்.

# முன்பள்ளிச்சிறாரின் பேச்சுத்திறன் விழா

சுழிபுரம்,ஜூன்23

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் சங்கானைப் பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் பேச்சுத்திறன் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்குசித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சங்கானை பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் வரதராஜா கோமளநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாகவலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் இ.இராசதுரை, கலாசார அபிவிருத்தி உதவியாளர் பொ.சந்திரவேல், பிரதேச சபை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.கிருபாகரன், கிராம உத்தியோகத்தர் வி.ரி.கதிர்காமநாதன், வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி செல்வி இ.ஜீவா ஆகியோர் கலந்துகொள்வர் (209-28)

## மரண அறிவித்தல்



**திருமதி நவரட்ணம் விஜயராணி**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி நவரட்ணம் விஜயராணி நேற்று (22.06.2006) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் தர்மலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் கீர்த்தனா, ஷாதனா, நஷீனா, கஜானன் ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயக்குமார் (சுவிஸ்), சுமதி, பிறேம்(லண்டன்), சுதா (பிரான்ஸ்), கார்த்திகா (லண்டன்), ஜெசின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராசா (ஜேர்மனி), பொன்னம்பலம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (51520)(32-14-11)

தகவல்:
**K.தர்மலிங்கம்** *(தந்தை).*




# கல்வி வழிகாட்டல் ஆலோசனைச் சேவைகள் நிலையம்

# Educational Guidance and Counselling Services Centre

## எமது அமைப்பு கடந்த பத்து வருடங்களாக....

★ பாடசாலை மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல், விசேட தேவை மாணவர்களுக்கான ஆலோசனை வழங்கல், மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல், ஆசிரியர்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் சேவை - பயிற்சி, பெற்றோர்களுக்கான ஆலோசனைச் சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது வடமாகாணம் முழுவதும் பிராந்திய ஆலோசகர்களினூடாகத் தனது சேவைகளை அரசசார்பற்ற ரீதியில் விஸ்தரித்துள்ளது.

நிபுணத்துவ ஆலோசகர்
**திரு.பா.தனபாலன்**
B.A.(Cey.), Dip. in Guidance and Coun. (1st class)
Dip. in Psy (1st Class), P.G.D.E. (merit),
M.Phil. in Education.

தலைமை அலுவலகம்
துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில் -
யாழ்ப்பாணம்.

(51518) (24-14-32-11)




21.06.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

08 10 13 43 (08)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201238109 இலிருந்து 201253268

சுப்பர் ஜக்பொட் பரிசு ருபா 1,39,70,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,39,70,450/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 1 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 23 | 5,000/- | 1,15,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 377 | 1,000/- | 3,77,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,225 | 500/- | 6,12,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 18,611 | 40/- | 7,44,440/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 17,449 | 20/- | 3,48,980/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,63,876 | 10/- | 26,38,760/- |
| மொத்தம் | | | 58,36,680/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,01,567 | | 64,36,680/- |

தொடர் இல. 301156782 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ருபா. 1,46,74,750/-**

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முரிகளை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 201241960-4-55 |
| கம்பஹா | 201243398-1-12 |
| இரத்தினபுரி | 201243540-0-91 |
| மொனராகலை | 201242601-0-09 |
| மாத்தறை | 201241207-0-90 |




அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் அமைந்திருந்த பணியாளர் விடுதி நேற்று முன்தினமிரவு ஆயுததாரிகளால் எரித்து சேதமாக்கப்பட்டது. இதில் சேதமடைந்த கட்டடக் கூரைப் பகுதிகளை படத்தில் காணலாம். (படங்கள் : நேசன்)

# சிங்கள நடிகருக்கு ஒரு வருடச் சிறை

கடுவெல, ஜூன் 23

தாக்குதல் சம்பவமொன்று தொடர்பான வழக்கில் சிங்கள சினிமாவின் பிரபல நடிகரான ரொஜர் செனிவிரத்னவிற்குக் கடுவெல நீதிவான் நீதிமன்றம் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டில் தலங்கம - கலல் கொட என்ற இடத்தில் தனது கள்ளக் காதலியின் கணவனைத் தாக்கிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணை முடிவின்போதே மேற்கண்ட தீர்ப்பைக் கடுவெல நீதிவான் சம்பா ஜானகி ராஜரட்ண வழங்கினார்.

நடிகர் ரொஜர் செனிவிரத்ன, கடந்த வருடம் சிறந்த நடிகராக அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (06)

# திராய்மடு சூட்டுச் சம்பவத்தில் தமிழ் வாலிபர் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு - புறநகர் பிரதேசமான திராய்மடு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தமிழ் வாலிபர் ஒருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜெயராஜ் சுதாகரன் (வயது - 24) என்பவரே இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளார் என மட்டக்களப்பு தலைமையகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - சின்ன ஊறணி இராணுவ முகாமுக்குப் பின்புறமாகவுள்ள வீதியால் பிரஸ்தாப இளைஞர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அண்மைக்காலம் தொடக்கம் தொடர் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இம்மாவட்டத்தில் தினமும் அதிகரித்துவரும் தாக்குதல்களால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்களும், ரோந்து நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பில் காணாமற்போனவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு - சந்திவெளிப் பிரதேசத்திலிருந்து கடந்த 10 தினங்களுக்கு முன்பு காணாமற்போன இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி பாலையடித்தோணா பிரதேசத்தில் ரயில் கடவைக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. ஒரு பிள்ளையின் தந்தையான கந்தசாமி தவராசா (வயது - 28) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி வீட்டிலிருந்து தொழிலுக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற இவர் பின்னர் காணாமற்போயிருந்தார். இவரைக் கடத்திச்சென்ற ஆயுதபாணிகள் சுட்டுக் கொலைசெய்துள்ளனர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

சடலம் மரண விசாரணைக்காக ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைளை ஏறாவூர் பொலீஸார் மேற்கொண்டுவருகின்றனர். (க)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் 225 பேருக்கு நிரந்தர நியமனம்

காரைதீவு, ஜூன் 23

வடக்கு - கிழக்கில் இன்னும் இரு வாரங்களுள் 225 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தைப் பெறவிருக்கிறார்கள்.

இதற்கான ஆங்கீகாரத்தை கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகே, வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கத்திற்கு நேற்று வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

01.07.2005 இல் 180 நாள்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கே நிரந்தர நியமனம் கிடைக்கவிருக்கிறது. தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம், வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் இணைந்து விடுத்த பத்திரிகைச் செய்தியில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# தம்பலகாமம் பகுதியில் 5 இளைஞர்கள் கைது

திருமலை தம்பலகாமம் பகுதியில் நேற்றுமுன்தினம் ஐந்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்திலேயே கைதுசெய்யப்பட்டனர் எனத் தம்பலகாமம் பொலீஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் தம்பலகாமம், விஜயபுரம், சிங்ககந்த ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் புலியூற்றுக் குளத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமில் பயிற்சி பெற்றவர்கள் எனவும், இவர்களது நடமாட்டம் குறித்தும், ஏனைய நடவடிக்கைகள் குறித்தும் மேலதிக விசாரணைகளை நடத்த இவர்களை கந்தளாய் பொலீஸாரிடம் தாம் ஒப்படைத்துள்ளனர் என்றும் தம்பலகாமம் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# முஸ்லிம் வர்த்தகர்களிடம் கொள்ளை

மட்டக்களப்பில் முஸ்லிம் மீன் வர்த்தகர்கள் மூவரிடம் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு புன்னைக்குடா தளவாய் வீதியில் 83,900 ரூபாய் மற்றும் செல்லிடப் பேசிகளை ஆயுதக் கும்பல் ஒன்று கொள்ளையடித்துச் சென்றதாக அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புன்னைக்குடா கடற்கரைக்கு மீன் வாங்கச் சென்ற போது கடந்த புதன்கிழமை காலை 7 மணியளவில் இகொள்ளைச் சம்பவம் நடந்ததாக வர்த்தகர்கள் இப்ராகிம் ரஹீம், மொகமட் ஹனீபா மற்றும் மொகமெட் செரீப் ஆகியோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பின் வடகிழக்கில் 14 கிலோமீற்றர் தொலைவில் தளவாய் உள்ளது.

மட்டக்களப்பு மற்றும் ஏறாவூரில் அண்மைக்காலமாக இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 8 ஆம் திகதி ஏறாவூர் பிரதேசத்துக்குட்பட்ட இராம நாதன் சண்முகலிங்கம் என்பவரது நகைக்கடை உடைக்கப்பட்டு நகைகளும் பணமும் கொள்ளையடிக்கப்பட்டன.

கடந்த 10ஆம் திகதி உலகசேகரன் சசிகரன் என்பவரின் நகைக் கடை உடைக்கப்பட்டு 10 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.


மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## கேள்வி கோரல் திகதி நீடிப்பு

கடந்த 02.06.2006 உதயனின் பக்கம் 08 இல் பிரசுரமான அரச அதிபரின் வாசஸ்தலம் இரு மாடிக்கட்டடம் அமைத்தல், மாநாட்டு மண்டபம் புதுப்பித்தல் தொடர்பான கேள்விப்பத்திர அறிவித்தலில் கேள்விகளுக்கான முடிவுதிகதி 07.07.2006ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (சி/49802)

க.கணேஷ் அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், தலைவர்.


## மரண அறிவித்தல்கள்

### மருசலீன் அல்பிறெட்



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருசலீன் அல்பிறெட் அவர்கள் நேற்று (22.06.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருசலீன் - பிரகாசம்மா தம்பதியரின் அன்பு மகனும், அல்வின் ஜென்ஸ் (கண்ணன் - நோர்வே), அல்வின் கொலின்ஸ் (சுவிஸ்), ஜெமினா மிலட்ஸ் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வதனி, அனு ஆகியோரின் மாமனாரும் அதீஸ்வரன், கிறியோனா ஆகியோரின் அன்புப் பேரனும் நீற்றா, டேவிட், றெஜினா, லெற்றீற்ரா,காலஞ்சென்ற வின்சென், வலன்ரைன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவராஜா, சண்முகம், நிற்குணானந்தம், அமலசோதி, ஜெயந்தினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீதிமன்ற வீதி, மல்லாகம்.* (51529)

தகவல்: இராசம்மா (மனைவி).

### அந்தோனிப்பிள்ளை இராசேந்திரம்

வெற்றிலைக்கேணியைப் பிறப்பிடமாகவும் புலோலி தெற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இராசேந்திரம் (தபால் ஊழியர் - முள்ளியான்) அவர்கள் 21.06.2006 புதன்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - றோசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் செபமாலையம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலுப்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் இளைய மருமகனும் திலெக்ஸ் (ரேட்ஸ்மன் கம்பனி கொழும்பு), அமல்றாஜ் (வணிகத்துறை இறுதிவருட மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்), டொமினிக் (விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (23.06.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலோலி தெற்கு, பருத்தித்துறை.*
*0773 237652, 021 226 3954*

தகவல்: மனைவி, பிள்ளைகள். (சி-49805)


## தேவை

1. கணக்கியல் பயிலுநர்களும் உதவியாளர்களும்.
2. சமையல் வேலை தெரிந்த சிற்றூழியர்.

நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும்

இல.140, பலாலி வீதி, பரமேஸ்வரச்சந்தி, (பெற்றோல் செற் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2478 (சி/49797)

## தேவை

★ கணக்குப் பதிவாளர் (பகுதிநேரம்)
★ எழுதுவினைஞர் (பில் கிளாக்)
(ஆண், பெண் இருபாலாரும்)

தொடர்பு:
கொனிக்கா கலர் லாப்
14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம். (சி/49804)

ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத, வாசிக்க, உரையாட, மிகக்குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ள

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

*Lectured :-*
**By ¦ NISHANTHAN**
*(Dip-in-English)*

மூன்று பிரபல கல்வி நிறுவனங்களில் ஆரம்பமாகின்றன.

புதிய பிரிவுகள்

யாழ். பொருளியற் கல்லூரியில்
சனி – ஞாயிறு 2 p.m
ஆரம்பம் – 24.06.2006

இணுவில் பொருளியற் கல்லூரியில்
சனி – ஞாயிறு 8.30 a.m
ஆரம்பம் 24.06.2006

BARATHY சித்தன்கேணியில்
திங்கள் – செவ்வாய் 3 p.m
ஆரம்பம் 26.06.2006

Note :

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேரம் : 10.30, 2.30 இன்று முதல்
ஜீத்தன் புகழ் ரமேஸ், பிரியாமணி, விவேக் நடித்த
"மது"
(சி-49188)

ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
பட்டியல்
புதிய வெளியீடு
(சி-47139)
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்

புதிய வெளியீடு



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த
திருட்டுப் பயலே
மனோகரா யாழ்ப்பாணம்
10.30, 2.30, 6.30 மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பராயத்தினர் கடத்தலில் கருணா குழுவுக்கு சம்பந்தம் உண்டு

## 'யுனிசெவ்' நிறுவனம் அறிக்கை

கொழும்பு, ஜூன் 23

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்ற கருணா அணியினர் இளம் பராயத்தினரைக் கடத்திச் சென்று வலுக் கட்டாயமாகத் தமது படையில் சேர்க்கின் றனர் என 'யுனிசெவ்' நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இது போன்ற 30 சம்பவங்களைத் தாங்கள் உறுதிப்படுத்தியுள்ளனர் எனவும் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை கருணா அணியினர் வலுக்கட்டாயமாகப் படையில் சேர்ப்பது அதிகரித்துள்ளது எனவும் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகக் கருணா அணியைச் சேர்ந்த தூயவன் பி.பி.ஸி. தமிழோசைச் செய்திச்சேவையில் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

# தம்புள்ளையில் 9 தமிழர் கைது!

தம்புள்ளையில் பொலிஸாரும், இராணு வத்தினரும் நேற்று முன்தினம் இரவு நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போது தமிழ் இளைஞர்கள் ஒன்பது பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். தம்புள்ளை பொருளாதார நிலையத்தை அண்டிய பகுதிகளில், விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் ஊடுருவி யிருக்கின்றார்கள் எனக் கிடைத்த தகவலை யடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டதாக தம்புள்ளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கண்காணிப்பாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் அறிவிப்பை விடுத்ததை அடுத்து, இந்த மூன்று நாடுகளையும் சேர்ந்த கண்காணிப் பாளர்கள் அந்தப் பணியைச் செய்வதற்கான தகைமையையும், நடுநிலைத் தகுதியையும் இழந்து விட்டனர் எனப் புலிகள் வெளிப்படுத் தினர். தமது அந்த நிலைப்பாட்டை இப்போதே மீள உறுதிப்படுத்தியுள்ள விடுதலைப் புலி கள், இந்த மூன்று நாடுகளைச் சேர்ந்த கண் காணிப்பாளர்களையும் வேறு நடுநிலை நாடு களைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களைப் புதி தாக நியமிப்பதன் மூலம் மாற்றுவதற்கு ஒரு மாத கால அவகாசமும் வழங்கியுள்ளனர்.

இந்தப் பின்னணியிலேயே - கண்காணிப் புப் பணியின் எதிர்காலம் குறித்து ஐயம் எழுந் துள்ள சூழ்நிலையிலேயே - மேற்படி நெருக் கடியை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து ஆராய்வதற்கான கூட்டம் எதிர்வரும் வியாழனன்று ஒஸ்லோவில் கூட்டப்பட விருக்கின்றது.

இலங்கையில் தற்போது பணியில் உள்ள 57 யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களில், கண் காணிப்புக் குழுவின் தலைவர் உட்பட 37 பேர் மேற்படி சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய மூன்று நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஏனைய இருபது பேரே நோர்வே மற்றும் ஐஸ் லாந்தைச் சேர்ந்தவர்கள்.

சுவீடன், டென்மார்க், பின்லாந்து நாட்டு கண்காணிப்பாளர்களை உடனடியாக வாபஸ் பெறும் நிலைமை ஏற்படுமானால் இலங்கை யில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணி அடி யோடு பாதிக்கப்படும் என ஒஸ்லோ கருது கின்றது.

எனவே, இந்தக் கண்காணிப்புப் பணிக் குத் தமது பிரதிநிதிகளை அனுப்பிய ஏனைய நான்கு நோர்ட்டிக் நாடுகளோடும் இவ்விட யம் குறித்து அவசரமாகக் கூடி ஆராய நோர்வே முடிவு செய்திருக்கின்றது.

புதிய கண்காணிப்பாளர்களை வேறு நாடு களிலிருந்து பெற்றுக் கொள்வதாயின் -

''நோர்ட்டிக் நாடுகளைச் சேர்ந்தவர்களே கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவர்'' - என்று தெரிவிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 3.5 ஆம் பிரிவு மாற்றப்பட வேண்டும். ''நோர்ட் டிக் நாடுகளையும் பிற நடுநிலை நாடுகளை யும் சேர்ந்தோர் கண்காணிப்புப் பணியில் ஈடு படுவர்'' - என அந்த ஒப்பந்த வாசகத்தைத் திருத்த வேண்டும்.

இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப் பினருடனும் ஒப்பந்த வாசகங்களை மாற்றிய மைப்பதற்கான பேச்சுக்களை நடத்தி, இணக் கம்காண வைத்து, அதன் பின்னர் புதிய நடு நிலை நாடுகளை அடையாளம் காண்பதற் கான உடன்பாட்டை எட்டி, அதனடிப்படை யில் புதிய கண்காணிப்பாளர்களைத் தேடிப் பிடித்துத் தெரிவு செய்து, பணிக்கு அமர்த்த இந்த ஒரு மாத கால அவகாசம் போதாது என ஒஸ்லோ கருதுகின்றது.

எனவே, எதிர்வரும் 2 ஆம் திகதி கண் காணிப்பாளர்களின் எதிர்காலம் குறித்து ஆராய் வதற்கான ஒஸ்லோ கூட்டத்தில் இந்த ஒரு மாத கால அவகாசத்தை நீடிக்கக் கோரும் கோரிக்கை ஒன்றைப் புலிகளிடம் முன்வைக் கத் தீர்மானிக்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. (உ)


Diploma in Internet & E-mail
Speed Batch Only 10 Hours
*Start on - 24.06.2006
*Days - Sat, Sun
*Time - 3 p.m.
*Only For 10 Students
Fees : 1000/=
Batch 07
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
C.B Computer Academy
T.P 021-4690291 Station Road, Kondavil.

இன்று விரிவுரைகள் ஆரம்பம்
A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கணனி விரிவுரைகள் இன்று ஆரம்பம்
Batch 1 - 23.06.2006
Batch 2 - 01.07.2006
மேலதிக விவரங்களுக்கு நேரில்
C.B Computer Academy
T.P 021-4690291 Station Road, Kondavil

Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
Jaffna.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
* பிரிவிற்கானது (Jaffna University)
* 2006, 2005 பிரிவுகளுக்கான வினா விடை வகுப்புகள்
ஆரம்பம் : 24.06.2006 10 a.m.
CIMA
ஆரம்பம் : 24.06.2006 11.30 a.m.
(சி/49803) Director.

Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
Jaffna.
aat (Sri Lanka)
Foundation, Intermediate & Final
Medium - Tamil & English
ஆரம்பம் : 24.06.2006 9 a.m
Director.

முகாமைத்துவ உதவியாளர்
போட்டிப் பரீட்சை வகுப்புகள் நடைபெறும் இடங்களும் நேரமும்
த.தவசேகர் B.Sc, P.G.D.E, P.G.D.P
D.M.I யாழ். சனி, ஞாயிறு 11.30 - 1.30
Science Hall யாழ். புதன், வியாழன் 6.45 - 7.45 (காலை)


# நீர்கொழும்பில் வர்த்தகர் கொலை

நீர்கொழும்பில் தமிழ் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல லப்பட்டுள்ளார். நீர்கொழும்பு, தலாத்துவ ஜும்ட் தேவா லயத்திற்கு அருகில் நேற்றுமுன் தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குமார் என்ற இந்த வர்த்தகர் தனது வர்த் தக நிலையத்தை மூடிவிட்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த நிலையில் றாகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந் தார். 1983 ஆம் ஆண்டு முதல் நீர்கொழும் பில் வசித்து வந்த இவர், புலிகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த வரென நீர்கொழும்புப் பொலிஸார் தெரி வித்தனர்.

நீர்கொழும்பு கடற்கரைப் பிரதேசத்தில் புலிச்சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப் பட்டதையடுத்து அங்குள்ள பிரபல தமிழ் வர்த்தகர்களுக்கு இனந்தெரியாத கோஷ்டி யினர் அச்சுறுத்தல்களை விடுத்துவருகின் றனர். இதனால், நீர்கொழும்பில் தமிழ்ச் சமூ கத்தின ரிடையே பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

# முறையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகள் நீதிமன்றத்தில் பதிவு செய் யப்படவில்லை.

காணாமற்போனவர்கள் தொடர்பாக நீதி மன்றத்தில் முறைப்பாடு செய்ய சட்டத்தில் இடமுண்டு. குற்றவியல் சட்டக் கோவையின் '136 உப பிரிவு 1அ ' படி காணாமற்போன ஒருவரின் உறவினர் வாய்மொழி மூலம் நீதி மன்றத்தில் முறைப்பாடு செய்ய முடியும்.

அவ்வாறு முறைப்பாடு செய்தால் அது தொடர்பான விசாரணைகளை நீதிமன்றம் மேற்கொள்ள முடியும். ஒவ்வொரு 14 நாள் களுக்கும் ஒரு தடவை அந்த முறைப்பாடு தொடர்பான முன்னேற்ற அறிக்கையை சமர்ப் பிக்குமாறு பொலீஸாரிடம் நீதிமன்றம் கோர முடியும்.

காணாமற்போனவர் அல்லது கைதுசெய் யப்பட்டவர் குறித்து நீதிவான் நீதிமன்றில் முறையிட அஞ்சத் தேவையில்லை. முறைப்பாடு தொடர்பாக வழங்கப்பட்ட விடயங்களில் இரகசியம் பேணப்படும். அத்துடன், பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களையும் பதிவு செய்ய முடியும். இதன் மூலம் தயாரிக்கப்ப டும் ஆவணத்தை மூடி மறைக்கவோ, கிடப் பில் போடவோ முடியாது.

இத்தகைய ஆவணங்களின் உறுதிப்ப டுத்தப்பட்ட பிரதிகளைப் பெறலாம். அவை வெளிநாடுகளில் ஒருவர் அரசியல் தஞ்சம் கோருவதற்கு உதவக்கூடிய ஆவணமாக வும் அமையும்.

குடாநாட்டில் ஒருவர் காணாமற்போனால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப் பாடு செய்வதுடன் நிறுத்தாமல் செஞ்சிலு வைச் சர்வதேச குழு, நீதிமன்றம் ஆகியவற் றிலும் சம்பந்தப்பட்டவர்கள் முறைப்பாடு செய்யவேண்டும். காணாமற்போவோர் தொடர்பான விடயத்தில் நீதிமன்றத்துக்கு கூடுதல் அதிகாரம் இருப்பதால் முறைப்பாடு செய்யும்போது நீதிமன்றத்தை நாடுமாறு அந்த அமைப்புகள் பொதுமக்களுக்கு ஊக்கம் கொடுக்கவேண்டும்.

அச்சுறுத்தல், கொலை மிரட்டல்கள் இரா ணுவத்தால் அல்லது குழுவால் விடுக்கப்ப டும் போது உடன் நீதிமன்றத்தை அணு கினால் அதை தடுத்து நிறுத்தக் கூடிய வாய்ப்பு உருவாகும்.

நவீன தொலைத் தொடர்பு வசதிகள் தற் சமயம் உள்ளதால் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்படும்போது தொலை பேசி இலக்கம் மற்றும் மிரட்டுபவர் யார் என்பது குறித்த விவரங்களை நீதிமன்றத் துக்கு தெரியப்படுத்தினால் நீதிமன்றம் நட வடிக்கை எடுப்பதன் மூலம் மிரட்டப்படுபவர் பாதுகாக் கப்படுவார். மிரட்டல் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தப்பட்ட தொலைபேசி இணைப்பை இரத்துச் செய்யுமாறு நீதிமன் றம் உத்தரவிட முடியும்.

ஓர் இடத்தில் ஒருவர் கைது செய்யப்பட் டால் அதைக் கண்டும் காணாதது போல பொ து மக்கள் செயற்படுகின்றனர். இந்த நிலை மாற வேண்டும்.

அண்மையில் கலட்டிச் சந்தியில் ஆறு இளைஞர்கள் பொதுமக்கள் பார்த்திருக்க கைதுசெய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது. ஆனால், எவரும் இது குறித்து பொலீஸாருக்கோ, நீதிமன்றத்துக்கோ கிராம சேவையாளர் களுக்கோ உடன் தகவலை வழங்கவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய போக்கை பொது மக்கள் கைவிட்டு எந்த இடத்தில் யார் கைது செய்யப்பட்டாலும் உடன் சம்பந்தப்பட்ட வர்களுக்கு தகவல் கொடுக்க முன்வர வேண் டும்.

கைதுசெய்யப்படுபவர்களை இராணுவத் தினர் தமது பாதுகாத்தில் வைத்து சித்திரவ தையையோ துன்புறுத்தலையோ செய்ய முடி யாது.

சந்தேகத்தில் கைது செய்பவர்களை உடன் பொலீஸாரிடம் கையளிக்க வேண்டும். நீதி மன்றத்தின் அனுமதியுடன் அட்டவணைப் படுத்தப்பட்ட தடுப்பு நிலையங்களில் வைத்து பொலீஸார் விசாரணை செய்யலாம்.

ஒருவர் கைதுசெய்யப்படும்போது பொது மக்கள் விழிப்புடன் உடன் தகவலை மனித உரிமைகள் ஆணைக்குழு, செஞ்சிலுவைச், சர்வதேசக் குழு, நீதிமன்றம் போன்றவற்றுக்கு வழங்குவதன் மூலம் ஒருவர் யாரால், எப் போது கைதுசெய்யப்பட்டார் என்ற நம்பக மான தகவல் உத்தரவாதம் கிடைக்கின்றது.

பொலீஸாருக்கு பொதுமக்களால் வழங் கப்படும் முறைப்பாடுகள் குறித்து நீதிமன் றத்துக்கு காலதாமதமாகவே தகவல் வழங் கப்படுகின்றது. எதிர் காலத்தில் முறைப்பாடு கிடைத்தவுடன் உடன் நீதிமன்றத்துக்கு தெரி யப்படுத்த வேண்டுமென பொலீஸாருக்கு அறிவுறுத்தியுள்ளோம். - இப்படி நீதிவான் தெரிவித்தார்.

# குடிவரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து 202 பேரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனக் கருதிய உயர்நீதிமன்றம் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கலாமென்றும் தீர்மானித் தது. இதன்படி மேற்படி 202 பேரும் நீர் கொழும்பு, கொழும்பு, களுத்துறை ஆகிய நீதிவான் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப்படுவார்களென் றும் உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.(க)

# ஈச்சமோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இந்நிலையில் படையினர் தேடுதல் நடத் திக்கொண்டிருந்த பகுதியில் இரவு 9 மணி யளவில் துப்பாக்கி வேட்டுகள் கேட்டன என்றும் அப்பகுதி வாசிகள் சிலர் தெரிவித் தனர்.

# மின்சாரக் கட்டணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய சூழ்நிலையில் மின் கட்ட ணங்களில் கூடுதலான அதிகரிப்பு மேற்கொள் ளப்பட்டால் மக்களின் வெறுப்பை அரசும் பாதிக்க வேண்டிவருமென்று அமைச்சர்கள் பலர் அங்கு சுட்டிக் காட்டினார். இதனைய டுத்து மின் கட்டணங்களில் குறைந்த வீத அதிகரிப்பை மேற்கொள்வதெனத் தீர்மானிக் கப்பட்டது.

இதன்படி ஒன்றிலிருந்து 30 அலகுகள் வரையான மின்பாவனைக்கு எதுவித கட்ட ணங்களும் அறவிடப்பட மாட்டாது. 30 இலி ருந்து 90 அலகுகள் வரையான பாவனைக்கு அலகு ஒன்றுக்கு ஒரு ரூபாவும், 90 இற்கு மேற் பட்ட அலகுகளுக்கு தலா ஒரு ரூபா ஐம்பது சதத்தை யும் மேலதிகமாக அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை நாளாந்தம் 6 கோடி ரூபா நட்டத்தை எதிர்நோக்கியுள்ள தால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் கட் டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. (க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.